24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 128 | பங்குனி 21ஆம் நாள் | வியாழக்கிழமை | 04 ஏப்ரல் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

# வடக்கு - கிழக்கில் விடுவிக்கப்பட்ட நிலத்தினுடைய விவரங்கள் எங்கே?

## வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கான நேற்றைய அமர்வில் கூட்டமைப்பு - மைத்திரி இடையே கடும் சொற்போர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4
அரச தலைவர் தலைமையிலான வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கான நேற்றைய அமர்வில், நிலவிடுவிப்புத் தொடர்பான வாக்குவாதம் உச்சம் தொட்டது. ஒரு கட்டத்தில் 'இது நாடாளுமன்றம் இல்லை. இங்கே உரத்துக் குரல்கொடுக்க முடியாது' என்று கூட்டமைப் பினரைக் கடிந்துகொண்டார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. » 21

## கட்டடம் ஏற்படுத்தினால்த்தான் தொழிற்சாலை பரந்தன் வரும்!

*இரசாயனத் தொழிற்சாலை தொடர்பில் ரிசாட் பதியுதீன் இப்படித் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 4
பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீண்டும் பரந்தனில் இயக்குவதானால் அதற்குரிய கட்டட வசதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு ஏற்படுத்தினால் மட்டுமே கொழும்பில் தற்போது இயங்கும் அந்தத் தொழிற்சாலையை மீண்டும் பரந்தனுக்குக் கொண்டுவர முடியும் என்று தெரிவித்தார் » 21

## தூக்குமேடை தயார்

*மணல்மூடையொன்றுதூக்கிட்டு நேற்றுப் பரிசோதிக்கப்பட்டது*

கொழும்பு, ஏப். 4
இலங்கையில் மீண்டும் சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள நிலையில், தூக்கிலிட பயன்படுத்தும் தூக்குமேடையை அதிகாரிகள் » 21

## தோற்கடிக்கப்பட்ட அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் திருத்தங்களுடன் இன்று

கொழும்பு, ஏப். 4
குழுநிலை விவாதத்தின் போது தோற்கடிக்கப்பட்ட இரண்டு அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் திருத்தங்களுடன் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் » 21

## எரிபொருள் விலை அதிகரித்தால் பேருந்துக் கட்டணம் அதிகரிக்கும்

*தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் நேற்று இவ்வாறு அதிரடியாக அறிவிப்பு*

கொழும்பு, ஏப். 4
எரிபொருள் விலைகளை அரசு அதிகரித்தால் மறுநாளே பேருந்துக் கட்டணங்கள் அதிகரிக்கப் » 21

## யாழ்ப்பாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக சத்தியமூர்த்தி?

யாழ்ப்பாணம், ஏப். 4
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தியை யாழ்ப்பாண » 21

## 72 ஆசனங்களையுடைய வானூர்திச்சேவை உடன்

*வடக்கு - கிழக்குக்கான அபிவிருத்திச் செயலணியில் சிவில் வானூர்திச் சேவைப் பணிப்பாளர் தெரிவித்தார்*

யாழ்ப்பாணம், ஏப். 4
பலாலியில் இருந்து 72 ஆசனங்களையுடைய வானூர்திச் சேவையை உடனடியாக ஆரம்பிக்க முடியும். அலுவலக வசதிகள் ஏற்படுத்தப்பட்டதும் சேவைகள் துரித கதியில் ஆரம்பிக்கப்படும் என்று இலங்கை சிவில் வானூர்திச் சேவைப் பணிப்பாளர் தெரிவித்தார். » 21



## பன்னாட்டு தமிழ் இதழியல் மாநாடு

யாழ்ப்பாணம், ஏப். 4
நான்காவது பன்னாட்டு தமிழ் இதழியல் மாநாடு யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நாளை, நாளைமறுதினம் என்று இரண்டு தினங்கள் இடம்பெறவுள்ளது.
மக்கள் இதழியல் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த மாநாடு இடம்பெறுகின்றது. உதயன் இந்த மாநாட்டுக்கு ஊடக அனுசரணை வழங்குகின்றது.
(ம)

## நீதியும் பொறுப்புக்கூறுதலும் இல்லாமல் நிரந்தர அமைதி ஏற்படப்போவதில்லை!

*இலங்கை தொடர்பில் இவ்வாறு தெரிவித்தார் பிரிட்டன் அயலுறவுத்துறைச் செயலர் ஹன்ட்*



லண்டன், ஏப். 4
நீதியும் பொறுப்புக்கூறலும் இல்லாமல் இலங்கையில் நிலையான அமைதி ஏற்படாது என்று தெரிவித்தனர். பிரிட்டனின் அயலுறவுத்துறை செயலர் ஜெரிமி ஹன்ட் இலங்கை விவகாரம் தொடர்பாக பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நேற்று எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். » 21

## மூதாட்டியை பதற்றப்படுத்தி தங்கச் சங்கிலி அபகரிப்பு

*பன்றித் தலைச்சியில் பரிதாபம்*

சாவகச்சேரி, ஏப். 4
70 வயது மூதாட்டிக்குப் பதற்றமான பொய்த் தகவலைத் தெரிவித்து, அவரிடமிருந்து 3 பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை நபரொருவர் அபகரித்துச் » 04



## கொழும்பில் நேற்றுத் தீ

கொழும்பு, ஏப். 4
கொழும்பு, கோட்டை 3ஆம் குறுக்குத் தெருவில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று மாலை பெரும் தீ விபத்து ஏற்பட்டது.
தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக 7 தீயணைப்பு வாகனங்களில் தீயணைப்புப் படையினர் அனுப்பப்பட்டனர். நீண்ட போராட்டத்தின் பின்னர் தீ ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. எனினும் சேதவிவரம் தொடர்பில் எந்த அறிவித்தலும் நேற்றிரவுவரை வெளிவரவில்லை.
(ம)

# சிரிப்புக் கதை

ஒரு ஊரில் இரண்டு அண்டப்புளுகர்கள் இருந்தனர் பொய் என்றால் பொய் அப்படி புழுகுவார்கள் ...
இருவரும் ஒரு மலையடிவாரத்தில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தபோது ஒருவன் சொன்னான் இந்த மலையுச்சியில எறும்பு இரண்டு சண்டை பிடிக்குது உனக்கு தெரியுதா ..? என்று !
மற்றவன் சொன்னான் பாருங்க ஒரு விடை ?
ஒரு எறும்புக்கு மூக்கால குருதி வடியுது தெரியுதா உனக்கு ...என்றான் ..
அப்படி அண்டப்புளுகர்கள் இருவரும்.
இவர்களின் தொல்லை தாங்க முடியாமல் இவர்களுக்கு ஒரு போட்டி வைத்து யார் மகா புளுகர் என்று தீர்மானிப்போம் என்று ஊர் மக்கள் முடி வெடுத்தனர்.
நாளை எங்கள் கோயில் குடமுழுக்கு அன்று கோபுர உச்சியில் இந்த கல்லை வைக்கப் போகி றோம் (கல்லை துணியொன்றால் மறைத்து கட்டி யுள்ளனர் ) இதில் சில வாசகங்கள் எழுதியிருக்கிறோம் அதை நீங்கள் யார் சரியாக வாசிக்கிறீர்களோ அவர்தான் இந்த ஊரின் மகா புளுகர் என்று பட்டம் பெறுவார். மறுநாள் காலை இருவரும் அழைக்கப்பட்டார்கள். கோபுர உச்சியை துரத்திலிருந்து பார்க்க வைத்தனர். சரி சொல்லுங்கள்...என்ன எழுதியுள்ளது?
ஒருவன் சொன்னான் அன்பே சிவம் என்று எழுதியிருக்கையா...! மற்றவன் சொன்னான். அன்பேசிவம் என்று மட்டுமா எழுதியிருக்கு உபயம் என்று நம்ம அய்யாவின் பெயரும் சிறிய எழுத்தில் இருக்கு என்றான் ...
ஊர் தலைவர் சொன்னார் மன்னிக்கவும்..
நாங்க அந்த கல்லை வைக்கவே இல்லை ..
அப்புறம் என்ன இருவருக்கும் தர்ம அடிதான் ...

# விகடத் துணுக்குகள்

ஆசிரியர்:நேற்று எதுவரை பாடம் நடத்தினேன்.
மாணவர்கள்: மணி அடிக்கும் வரைதான் சேர்.





அப்பா: ஆபத்தில் யானை, குதிரை எல்லாம் கத்தவே கத்தாது. ஏன் என்று கூறுங்கள்.
மகள்: யானை பிளிறும் குதிரை கனைக்கும். இதனால் அவை கத்துவதில்லை.

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
வெற்றி வாரம்:3169 திகதி:2019.04.03 புதன்கிழமை
SATURDAY FORTUNE
ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 27 29 37 48 H
போனஸ் இலக்கம்: 51
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 38,176,410/-
Web: www.dlb.lk
அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 574
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.04.03
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,315,315/-
வெற்றி இலக்கங்கள்: 08 40 44 54
ஆங்கில எழுத்து: B
Web: www.dlb.lk
அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**ராசி அதிர்ஷ்டம்**
திகதி: 03.04.2019 வெற்றி வாரம்: 2491 வர்ணம்: பச்சை
துலாம்
வெற்றி இலக்கங்கள்: 04 27 34 52
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 21, 39, 434/=
04.04.2019ம் திகதி வியாழக் கிழமை மண்ணிற நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

**සංවර්ධන වාසනාව**
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 235
சீட்டிழுப்பு திகதி 03.04.2019 நீலம்
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 19 26 43
விதி எண்: 02
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 15, 364, 928/=
2019.04.06ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கிராமிய அமைப்பு மீனவர்களின் அபிவிருத்திக்காக பலவழிகளிலும் வித்திட்ட எமது முல்லைத்தீவு வடக்கு கடற்றொழில்நீரியல்வளதிணைக்கள பொறுப்பதிகாரிமதிப்பிற்குரிய **திருவாளர் தேவசேனாதிபதி சுசாந்தன்** அவர்களின் ஆற்றல் மிகுந்த சேவையினை பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றோம்

**ஆனந்தபுரம்**
**செபஸ்தியார் கடல்த்தொழிலாளர் கிராமிய அமைப்பு**

## Old Boys' Association St. John's College, Jaffna.

**ANNUAL GENERAL MEETING**

The 103rd Annual General Meeting of the Old Boy's Association of St. John's College, Jaffna will be held on next Saturday 6th April, 2019 at 9.30 am in the College Auditorium

Breakfast and lunch Tickets priced at Rs.500/= is available from the office or at the venue.

**Mr.T.Pradheeban**
**Secretary.**



Dialog
MEGA அதிஷ்டம்
வசந்தி இரத்னசீலி
பிபில
21வது கோடீஸ்வர வெற்றியாளர்
இதுவரை வெற்றியீட்டியுள்ள வெற்றியாளர்கள்
கோடீஸ்வரர்கள் 21
10 இலட்ச வெற்றியாளர்கள் 179
இலட்சாதிபதிகள் 1020
இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ.10,961,538/-
இலங்கை முழுவதும் அதிக வெற்றியாளர்களை உருவாக்கும் பிரமாண்டமான பரிசு குவியல்
#121# டயல் செய்து உங்களுடைய வெற்றி இலக்கங்களை பெற்றுக்கொள்ளுங்கள்
உங்களுக்கு கொண்டு வருவது
இலங்கையின் பிரபலமான தொலைத் தொடர்பு சேவை வழங்குனர்
Dialog
an axiata company www.dialog.lk எதிர்காலம் இன்றே.

2019
அக்கறையின்
வரவு செலவுத் திட்டம்

மக்களுக்கு வலிமையும் பலமும்

# எமது பிள்ளைகளுக்கு ஒக்ஸ்வர்ட், கேம்ப்றிஜ், ஹாவர்ட், MIT கல்வி வரம்

2019



உயர் கல்விக்காக ஒக்ஸ்வர்ட், கேம்ப்றிஜ் போன்ற பல்கலைக்கழகங்களுக்கு செல்வது எமது நாட்டின் உயர் வகுப்பினருக்கு மட்டுமே உரியதாக காணப்பட்டது. இருப்பினும் படிப்பில் திறமையை வெளிப்படுத்தும் நம் நாட்டின் ஏனைய குடிமக்களது பிள்ளைகளுக்கும், 2019 வரவு செலவுத் திட்டத்தில் Scholarship for Education Excellence நிதியம் ஊடாக அவ்வரம் கிட்டியுள்ளது. அதற்கமைய 2019 ஆகஸ்ட் மாத உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் 14 மாணவர்களுக்கு, உலகப் புகழ்பெற்ற ஒக்ஸ்வர்ட், கேம்ப்றிஜ், ஹாவர்ட், MIT உள்ளிட்ட பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறுவதற்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். 2020ம் ஆண்டு இந்த புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை 28 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

**14 மாணவர்களுக்கு**
**2019 ஆகஸ்ட் முதல்**

மக்களை பலப்படுத்தி வளமான சமூகத்தை உருவாக்குவோம் | நிதி அமைச்சு

## துயர் பகிர்கின்றோம்



யா/ வேலணை மத்திய கல்லூரியின்
ஆரம்பகால புகழ்பெற்ற பௌதீகவியல்
ஆசிரியர்
**அமரர் கந்தையா கோபாலபிள்ளை**
அவர்களின் சிரேஸ்ட புதல்வியும் எமது
கல்லூரியின் பழைய மாணவரும் தீவக
வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்
(விஞ்ஞானம்)
**நா.சபாநாயகம்** அவர்களின்
துணைவியாருமான

**திருமதி குமுதினி சபாநாயகம்**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**மற்றும் பழைய மாணவர் சங்கத்தினர்**
**(யா/ வேலணை மத்திய கல்லூரி)**

## கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்தாபனத்தில்
கடமையாற்றும்
முகாமையாளர்
**சி.சிவகுமார்**
அவர்களின்
அன்புத் தாயார்

**சிவானந்தம் தங்கரத்தினம்**


அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சர்நதி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**சாரங்கா நகை மாட**
**உரிமையாளர், ஊழியர்கள்.**

(CS/31895)(11.17)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11 | 02 |
| 12 | 04 |
| 1980 | 2019 |

**பொன்னையா பாலறஜித் (மதன்)**

கொக்குவில் மேற்கு வராகி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாலறஜித் (முதன்) கடந்த (02.04.2019) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் பொன்னையா அன்னலட்சுமி - தம்பதியினரின் அன்பு மகனும் சின்னராசா - புவனேஸ்வரி தம்பதியினரின் மருமகனும் றொபிற்றாவின் அன்புக் கணவரும் மயூட்ரனின் பாசமிகு தந்தையும் ஆனந்தறாஜி, காலஞ்சென்ற பாலறஞ்சித் மற்றும் சாளினி றொபின் ஆகியோரின் அன்பு சகோதரனும் பாஸ்கரன், றெபின்சன், நிரூபனின் பசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் .இல்லத்தில் இருந்து இன்று (04.04.2019 வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் எடுக்கப்பட்டு ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை ஆலயத்தில் இறுதி ஆராதனை ஒப்புக் கொடுக்கப்பட்டு காக்கைதீவு ஆனைக்கோட்டை அடைகலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி குமுதினி சபாநாயகம்**
*(முன்னாள் ஆசிரியர் - யா வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)*

வேலணை வடக்கு சோளாவத்தை ஞானவைரவர் அருள் வீச்சில் வாழ்ந்த அமரர் கந்தையா கோபாலபிள்ளை - கலாவல்லி தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வியும் எமது ஆலயத்தின் அறங்காவலர் சபையின் முன்னாள் தலைவர் திரு.நா சபாநாயகத்தின் துணைவியாருமான **திருமதி குமுதினி சபாநாயகத்தின்** பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஞானவைரவப் பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**அறங்காவலர்சபை வேலணை வடக்கு சோளாவத்தை**
**ஞானவைரவர் திருக்கோவில்**

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பரிபாலன சபையின்
பொருளாளர்
**நல்லதம்பி சசிதரன்**
*(அஞ்சலர் - தபாலகம், புங்குடுதீவு)*
அவர்களின் பிரிவால் துயருறும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
வயலூர் முருகனை
பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**பரிபாலன சபையினர்**
**புங்குடுதீவு மடத்து வெளி (வயலூர்)**
**ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி ஆலயம்**

## 9 ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் பிறேமலோஜினி**
**பிரபாகரன்**

திதி : சதுர்த்தசி 04.04.2019

மலர்ந்த மலராக
1982.08.30

கருகிய பூவாக
2010.04.13

பிறேமாக்குட்டியே பிரிந்துதான் சென்றாயே
பிரியமுடன் பெற்றோரை அழைத்ததேனம்மா
பிரிவினால் வாடுகின்றோம் பிறேமாவே
உங்கள் ஆத்மா சாந்தி பெற்றிடவே
அனுதினமும் கடவுளை வேண்டுகின்றோம்

உன் நினைவால் வாடும்
**அண்ணாமார், அக்காமார்,**
**அத்தான்மார், அண்ணிமார்**

103/23, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
077 466 1045

(CS 23783)(14.17)

*ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ!*

## மரண அறிவித்தல்

**திருமதி புவனேஸ்வரி சுந்தரலிங்கம்**



தோற்றம் 24.06.1964 — மறைவு 03.04.2019

யாழ். நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது குளப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சுந்தரலிங்கம் நேற்று (03.04.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் தங்கம்மா தம்பதிகளின் புதல்வியும் - காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் மனைவியும் அருட்செல்வி, பிரியதர்சினி, சத்தியப்பிரியா, மதிவதனி, கங்காஜினி, நிறோஜினி, சாரங்கன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மூபரூபன், பிரபாகரன், தவரஜீபன் ஆகியோரின் மாமியாரும் யோகேஸ்வரன், விஸ்வபாலன் (துரை), சீதாதேவி, பாலச்சந்திரன், பகவதி (லட்சுமி) ஆகியோரின் சகோதரியும் பிருத்விகா, கம்சவி, டெஸ்மிகா, ஜஸ்மிதா, ரக்சிகன் ஆகியோரின் ஆசைமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2019) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மூதாட்டியை...

சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தப் பரிதாபச் சம்பவம் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோயிலில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. கோயில் உள்வீதியில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மூதாட்டிக்கு ஒலிபெருக்கி மூலமாக, மகன் தேடுகிறார் என்றும் உடனடியாக அறிவிப்பு இடத்துக்கு வருமாறும் நபரொருவர் அறிவிப்பு விடுத்துள்ளார். அங்கு வந்த மூதாட்டியிடம், உங்களின் மகன் விபத்தில் சிக்கியுள்ளார். அவரை சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்துள்ளேன். பணம் இருந்தால் தாருங்கள் என்று குறித்த நபர் கூறியுள்ளார். தன்னிடம் பணம் இல்லையென்று மூதாட்டி தெரிவிக்க, கழுத்தில் அணிந்திருந்த தங்கச்சங்கிலியைத் தருமாறு அவர் கேட்டுள்ளார். மகனுக்கு என்ன ஆனதோ என்ற பதற்றம், கவலையில் அணிந்திருந்த 3 பவுண் தங்கச் சங்கிலியைக் கழற்றி அந்த நபரிடம் கொடுத்துள்ளார். இதையடுத்து குறித்த நபர் மாயமானார். பதற்றத்திலிருந்த தாயிடம் வந்த மகன் என்னவென்று கேட்டபோதே சம்பவம் தெரியவந்தது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, கோயிலில் பொங்கல், படைக்கும் இடத்தில் பொங்கல் வாங்க நின்ற இளம் பெண் அணிந்திருந்த 2 பவுண் சங்கிலி திருட்டுப் போயுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டது. இது போன்று, தீர்த்தக் கேணியில் குளிப்பதற்கு உடுப்புகளுடன் கூடிய பயணப்பையை அந்த இடத்தில் வைத்துவிட்டு குளித்துவிட்டு வந்து பார்க்கையில் பயணப்பையைக் காணாது மூன்று பெண்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என்றும் ஆலய அறிவிப்பு அலுவலகத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர்.

(த-9)



## கண்ணீர் அஞ்சலி

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்
தர்மபரிபாலன சபையின் நிர்வாகசபை உறுப்பினரும்,
சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் பொருளாளரும்,
ஆயட்கால அங்கத்தவருமான
**சி. சிவகுமாரன் (சாரங்கா குமார்)**
அவர்களின் அன்புத் தாயார்

### தங்கரத்தினம் சிவானந்தன்

அவர்கள் இயற்கை எய்தியதைக் கேள்வியுற்று ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ கற்பக விநாயகரை வேண்டி நிற்பதோடு, அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

**வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்
தர்மபரிபாலன சபையினரும், சைவசமய அபிவிருத்திக்கழகத்தினரும்.
366, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி அருள் பெனிற்றோ பெல்ஷியா குருஸ்**
அவர்களின் அன்புத் தந்தை
57, மவுண்கார்மேல் வீதி, குருநகரைச் சேர்ந்த

### பெனடிக்ற் யோண் அன்ரனி கிளைவ்

*(ஓய்வூதியர் காணிப்பதிவகம்)*

03.04.2019 புதன்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/புனித சாள்ஸ் ம.வி** (CS 24473) (14.17) **பாடசாலைச் சமூகம்.**

வீடுகளுக்கு வந்து கற்பித்தல்
**ஆங்கிலம்/ தமிழ் மொழிமூலம்**
ஆங்கிலம் - சகல தரங்களுக்கும் கலைப் பாடங்கள் கணக்கியல் தரம்: 10,11, A/L
**077 331 6402**

**பணியாளர் தேவை**
யாழ்நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
01. பொதி செய்தல் - பெண்
சம்பளம்
15,000 முதல் 20,000 வரை
**077 447 9815**

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கரத்தினம் சிவானந்தன்



370/1, கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த திருமதி தங்கரத்தினம் சிவானந்தன் 03.04.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - பாக்கியம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சிவானந்தனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு இராசரட்ணம் மற்றும் நாகரட்ணம், முத்துக்குமாரசுவாமி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவாஜினி (மோட்டார் போக்குவரத்து திணைக்களம்), கலாரஞ்சினி (ஆசிரியர் - கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), சிவகுமாரன் (குமார் - சாரங்கா நகைமாடம்), ரோகிணி (ஆசிரியை - வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிறிதர் (வியாபாரம்), சத்தியகுமார் (ரூபன் - மின்இணைப்பாளர்), சிவாஜினி, பத்மகுமார் (முகாமைத்துவ உதவியாளர் - பிரதேச செயலகம் நல்லூர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ராகவி, யஸ்வந்திகா, சுரந்தகி, சரஞ்சினி, தருணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் 62, கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வு கொழும்புத்துறையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**62, கொழும்புத்துறை வீதி,
பாண்டியந்தாழ்வு, கொழும்புத்துறை.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

**0212213673**

## மரண அறிவித்தல்

### குமுதினி சபாநாயகம்

*(முன்னாள் உயிரியல் ஆசிரியை, யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, வவு/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)*



வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.539, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட குமுதினி சபாநாயகம் 01.04.2019 - திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் கலாவல்லி தம்பதிகளின் சிரேஷ்ட அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற நாகமணி மற்றும் சிதம்பரம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சபாநாயகம் (உதவிக்கல்விப் பணிப்பாளர், தீவகவலயம்) இன் அன்பு மனைவியும் சாரங்கா (2ஆம் வருட மருத்துவபீட மாணவி - கொழும்பு பல்கலைக்கழகம்), மதுஷா (2017 A/L உயர்தர விஞ்ஞானபிரிவு மாணவி - யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரேணுகா, செல்வநிதிநாதன் (கனடா), மாலினி பத்மகுமார் (கனடா), கோசலா கேதீஸ்வரன்(கனடா), கோகிலா கோபாலபிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் புவிநாயகம் (ஓய்வு நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்), நவநாயகம், குலநாயகி (பிரான்ஸ்), Dr.யோகநாயகம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2019) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**539நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

**0212219859/0770237593 - கணவர்**

## மரண அறிவித்தல்

### குமரகுலசிங்கம் அசோக்குமார்



சில்லாலை மேற்கு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் நல்லூர் மூத்த விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரகுலசிங்கம் அசோக்குமார் 02.04.2019 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரகுலசிங்கம் அம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான் கெங்காதரன் ரத்தினம் தம்பதிகளின் மருமகனும் மங்களத்தின் பாசமிகு கணவரும் தசாப்தன், ரசாத், நர்மதா ஆகியோரின் அன்புத் தந்தையும் துரைராசா சாரதாம்பிகை ஆகியோரின் பெறாமகனும் அனுரா, அரவிந்தன், வித்தியா, பிரதீபா, பிரவீணா, பிரேந்தினி, பிரகலாதன், பிரணவன், காலஞ்சென்ற திலீபன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நிமலேந்திரன், மங்களராஜ், குலவதனி, திபாகரன், நேசரட்ணம், றிச்சாட், பிரியதர்ஷினி ஆகியோரின் அன்பு மச்சானும் காலஞ்சென்றவர்களான காங்கேயன், ரஞ்சினி மற்றும் கமலாசினி, ஈஸ்வரி, லோகேஸ்வரி, பூங்கோதை, கலாவதி, சிவகுமார், தயாளன், விமலன், அம்பிகைபாகன், அம்பிகை ஆகியோரின் மைத்துனரும் டிலக்ஷனா, டிலக்ஷிகா, டிலோஜினி, குமுதினி, அபிஷன், நிதுக்ஷனா ஆகியோரின் பெரியதந்தையும் திவ்யா, தாட்ஷாயினி, குகன்ராஜ், அனுயா, நிரோஜா, சார்மி, தரணிக்கா, ஹரிஷ், நிரந்தினி, நிபிக்ஷனா, நிபிக்ஷிகா, நிபிக்ஷன் ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2019) வியாழக் கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**14, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.** (CS 24474) (14,17)

**தகவல்:
குடும்பத்தினர்.**

**தசாப்தன் - 077 686 8063/ ரசாத் - 077 373 7072 } மகன்மார்**

ES Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=






021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## ஆறாம் ஆண்டு நினைந்துருகல் அஞ்சலி

மனிதநேயம் மண்ணில் மரணிப்பதில்லை



திதி: 04.04.2019

### Lion மார்கண்டு கிரிதரன்

அகில இலங்கை சமாதான நீதவான்
விமாகி உரிமையாளர்.

அன்பு உருவே மறைந்தாலும் அழியாது உங்கள் நினைவலைகள்
ஆண்டுகள் ஆறு ஆனாலும் ஆறிடுமோ எம் துயரம்
இதயம் இத்துயர் சுமந்து கனமாய் கனக்கிறது
ஈரவிழிகள் நிறைகிறது கண்ணீர் சொரிகிறது
உயிருக்குள் உறைந்து எம் உயிரோடும் உணர்வோடும் கலந்து
எம்முள்ளே நீங்கள் எந்நாளும் உயிர்வாழ்கிறீர்கள்

**இனிய நினைவுகளும் இழந்தவலியும்வேதனையும்
இறுதிமூச்சுவரை எம்முள் சுமப்போம்
உயிரோட்டமான நீங்கா நினைவலைகளுடன்**

அன்பு மனைவி – றோகினி கிரிதரன்
அருமை மகள் – கிரிதரன் அம்ரிஷா

தொலைபேசி: 0777 701 523

This project is funded by:
Eurppean Union
යුරෝපා සංගමය ஐரோப்பிய ஒன்றியம்

This project is Implemented by:
Habitat for Humanity Sri Lanka
World Vision

**விலைமனுக் கோரலுக்கான அழைப்பு**

**அமுக்கி நிலைப்படுத்தப்பட்ட கற்கள் (CSEB) தயாரிப்பதற்கான கிறவல் மண் கொள்வனவு**

ஹபிட்டாட் போ ஹியுமானிட்டி மற்றும் வேல்ட் விஷன் லங்கா ஆகியன கிறிஸ்தவ அரசசார்பற்ற நிறுவனங்களாகும். இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களான கிளிநொச்சி முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஒரு நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக "வீடு அல்ல வாழ்விடம்" என்ற தொனிப்பொருளின் கீழான ஒரு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் ஹபிட்டாட் மற்றும் வேல்ட் விஷன் என்பன இணைந்து செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் ஒரு தொகை வீடுகள் அமுக்கி நிலைப்படுத்தப்பட்ட கற்களைப் (CSEBs) பயன்படுத்தி சூழல் நேய வீடுகள் நிர்மாணித்துக் கொண்டு வருகின்றன, இவற்றில் இன்னும் 600 சூழல் நேய வீடுகள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்த இல: NORTH/HFHSL/GRV/2019-1 பிரகாரம் பொருத்தமான கிறவலை கீழ்குறிப்பிடப்பட்ட CSEB உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்கு விநியோகிப்பதற்கு இலங்கையில் பதிவு செய்துள்ள தகுதியுடைய ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலை கோரப்படுகின்றது.

| பொருள் | விபரம் | அளவு | தொகை (நிலை 1) | விநியோகிக்கப்பட வேண்டிய இடங்கள் |
|---|---|---|---|---|
| கிறவல் | குறைவான களி, வண்டல் கொண்டதும் மற்றும் தாவரப் பகுதிகளற்ற அங்கிகரிக்கப்பட்ட கட்டுமான தரத்திலான கிறவல் மண். | கியூப் | 3500.00 | !புளியம்பொக்கனை, தர்மபுரம், கிளிநொச்சி (12.5 Km பரந்தன் சந்தியிலிருந்து A35) |
| கிறவல் | | கியூப் | 1500.00 | RDS கட்டிடம் தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| கிறவல் | | கியூப் | 2000.00 | இளங்கோபுரம், தேராவில், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. (பழைய RDS கட்டிடம்) |

விலைமனுக் கோரலுக்கான விண்ணப்பபடிவத்தை 04.04.2019 தொடக்கம் 11.04.2019 (கிழமை நாட்கள்) காலை 08.30 தொடக்கம் மாலை 4.30 மணி வரையிலான காலப்பகுதியில் ஹபிட்டாட் போ ஹியுமானிட்டி சிறிலங்கா, கீழ்வரும் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| தேசிய அலுவலகம் | கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் | முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் |
|---|---|---|
| 42/14, ஆனந்த குமாரசாமி மாவத்தை, கொழும்பு 03. | 27, கிருஷ்ணா கோயில் வீதி, கிளிநொச்சி. | வட்டாரம்-01, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| தொ.இல: 0112577102-10 | தொ.இல: 021 2283290, 0772320957 | தொ.இல: 021 229 0389, 0763525493 |

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்கள் 26.04.2019 இலங்கை நேரப்படி மதியம் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்ககூடியவாறு மூடிய கடித உறையிலிட்டு மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கவும். விலைமனுக் கோரல் தெரிவானது 29.04.2019 அன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் நடைபெறும்.

கேள்வி மனுக்கோரல் சம்மந்தமாக ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் மாவட்ட திட்ட முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.

நிறுவனங்களின் திட்ட தலைமை அதிகாரி,
ஹபிட்டாட் போ ஹியுமானிட்டி சிறிலங்கா, கொழும்பு

## பெயர் மாற்றம்

கனகரத்தினம் மோகனராஜா ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை கனகரத்தினம் மோகனதாசன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் மோகனதாசன் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(AKN 685) (14.17) **கனகரத்தினம் மோகனதாசன்**

## துயர் பகிர்கின்றோம்



எமது தீவக கல்வி வலயத்தின்
உதவி கல்விப் பணிப்பாளர்
(விஞ்ஞானம்)
**நா.சபாநாயகம்** அவர்களின்
அன்பு மனைவியாரான
திருமதி
**குமுதினி சபாநாயகம்**

அவர்கள் கடந்த (01.04.2019) திங்கட்கிழமை காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**விஞ்ஞான ஆசிரியர்கள்
தீவக கல்வி வலயம்**

(cs.14559) (13.17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்வநாயகி பூபாலசிங்கம்



தோற்றம் 04.10.1950 மறைவு 03.04.2019

யாழ்ப்பாணம் நாவற்குழியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வநாயகி பூபாலசிங்கம் நேற்று (03.04.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா - பூரணம் தம்பதிகளின் அன்புமகளும் காலஞ்சென்ற நாகமுத்து - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லம்மா, செல்வமலர் மற்றும் செல்வமணி, பாலசுப்பிரமணியம், செல்வராணி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், பூலோகதிரவியத்தின் அன்பு மைத்துனியும் நிதர்சன் (Project Manager at Virtusa) அவர்களின் பாசமிகு தாயாரும், சிவரூபியின் அன்பு மாமியாரும், மாதுரி, சிந்தூரி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.04.2019) வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 1.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனத்திற்காக கல்கிசை இந்துமயானத்திற்கு பி.ப 3.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**077 396 0842**



### திருமதி நாகம்மா சபாரத்தினம்

காரைநகர், சிதம்பராமூர்த்தி கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகம்மா சபாரத்தினம் நேற்று (03.04.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனி செல்லையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மூத்தமகளும் காலஞ்சென்றவர்களான வாட்டாளை நாகலிங்கம் - செல்லாச்சி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற (BRITISH NAVY), சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, சபாநடேசன், புஸ்பராணி, புஸ்பலீலா, நகுலேஸ்வரன், நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசம்மா, செல்லம்மா சரஸ்வதி, பஞ்சரத்தினம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் செல்வராணி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2019) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிதம்பரா மூர்த்தி கேணியடி (மல்லிகை)
காரைநகர்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 24476/15/18)

## ES Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=

சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில். விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

- Poster
- Notice
- Lable
- Wedding Card
- Bag Print
- Award
- Frame Item
- Batch
- Vehicle Brand
- T-Shirt
- Cap
- ID Card
- Key Tag
- Book Mark
- Pen Print
- Book Printing
- Wooden Print

பனர் பிரிண்ட் (Banner), 35/=



அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்

பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்.

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472

New Market, 1st Floor, Chavakachcheri 021 492 7432
esprintersjaffna@gmail.com

## YAMAHA Revs Your Heart

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விசேட சலுகை எம்மிடம் Yamaha மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையில் அதிஸ்டம்



மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கி

ரூபாய் 3.5 மில்லியனுக்கும் மேலான பெறுமதியுள்ள Brand NEW

WAGONR ஐப் பரிசாக வெல்லுங்கள்



அத்துடன் பெறுமதியுள்ள வீட்டு எலக்ட்ரானிக் பொருள்களையும் வெல்லுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

DIGITAL ELECTROICE
62/16, Stanley Road, Jaffna.
Tel: 021 222 4040 Mob : 077 662 3824 Email: nraveen1981@gmail.com

## SOLAR சிஸ்டம்ஸ்

- செலவை ஏற்படுத்திய மின்சாரம் வருமானத்தைப் பெற்றுத் தரும்
- மின் கட்டணம் இல்லை

E Green Lanka
MICRO PC SYSTEMS
Micro Power Co Systems

WARRANTY 25 YEARS WARRANTY



| 2kW SYSTEM | 3kW SYSTEM | 5kW SYSTEM | 8kW SYSTEM | 12kW SYSTEM | 15kW SYSTEM | 22kW SYSTEM | 33kW SYSTEM | 44kW SYSTEM |
|---|---|---|---|---|---|---|---|---|
| 350,000/= | 470,000/= | 750,000/= | 1,080,000/= | 1,480,000/= | 1,695,000/= | 2,200,000/= | 3,300,000/= | 4,400,000/= |
| 240 Units | 360 Units | 600 Units | 950 Units | 1465 Units | 1795 Units | 2640 Units | 3960 Units | 5280 Units |

மின்சார தடை இல்லை
No Power-Cut

விவசாயிகளுக்கான மின்சாரம்
1hp முதல் 60hp வரை

SOLAR STREET GARDEN LIGHTS
3W 4W 5W 6W 15W 30W

7 வருடங்களுக்கான தவணை கட்டண முறை

44 kW: CEB இனால் வருமானம் ரூ.116,160 (5280 x 22/-) ரூ.44 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 68,600/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 47,560/-

33 kW: CEB இனால் வருமானம் ரூ. 87,120 (3960 x 22/-) ரூ. 33 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 51,450/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 35,670/-

22 kW: CEB இனால் வருமானம் ரூ. 58,080 (2640 x 22/-) ரூ. 22 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 34,300/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 23,780/-

12 kW: CEB இனால் வருமானம் ரூ. 32,230 (1465 x 22/-) ரூ. 14.8 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 23,067/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 9,163/-

*நிபந்தனைகளுக்குட்பட்டது

KACO Fronius SOLAX ENVERTECH victron energy REC JinKO Solar YINGLI SOLAR ReneSola

LECO Approved

கொழும்பு - 077 3963281/ 077 3963283 / 071 0356062 / 077 3963278
யாழ்ப்பாணம் - 077 3963280 / 0777 425973 / 0777 425974 / 077 3963284
வவுனியா - 0777 425974 / 0777 763071 / 077 3963273
மட்டக்களப்பு - 071 0356069 / 071 8963280 / 071 0356072 / 077 3963281

TIPS!!!
*Factors affecting performance of a solar PV system!*
Factors which are under the control of Human efforts:
1. Solar Panels: Figures given in the datasheet by the panel manufacture and its accuracy of Peak power, Module efficiency, temperature co efficient.=> So request for Tier 1 brand
2. Installation: Panel's orientation and tilt, System Design, Grid quality =>Select well-trained / Certified Company for the Installation.
3. Inverter: Efficiency =>so select premium brands.

*Factors which are beyond the control of Human efforts:*
1. Solar irradiance (SI) available at the site
2. Ambient temperature 3. Accumulation of Dirt/Smog
4. wind speed etc.

மொத்த விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும் : 0773 076409 / 071 9963275 | E-mail: mail@micropcsystems.com | Web: www.solarpowerlk.com

No.115C, W.A. Silva Mawatha, Colombo 06. Tel: 011 4000686 | No.218, Hospital Road, Jaffna. Tel: 021 2225893 | No.66B, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 2221969 | No.115-5C, New Kalmunai Road, Kalladi, Batticaloa. Tel: 011 5640650

# ரணிலின் சுயரூபம் அம்பலமாகிவிட்டது

சேரலாதன்



தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தாமும் ஒரு சாதாரண தென்னிலங்கை அரசியல்வாதி என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அதன் பேச்சாளருமான சுமந்திரனின் நாடாளுமன்ற உரைக்குப் பதிலளிக்கும் விதமாக அவர் வெளியிட்ட அறிக்கை இதை தெட்டத் தெளிவாக வெளிப்படுத்திவிட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே ரணில் விக்கிரமசிங்கவின் உண்மையான உள்ளக்கிடக்கை அம்பலமானது. எவர் எதைச் சொன்னாலும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கெனக் கலப்பு நீதிமன்றம் அமைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென அவர் கூறியதன் மூலமாக நீதியான விசாரணையொன்று இடம்பெறுவதை அவர் ஏற்கமாட்டாரென்பது தெளிவாகத் தெரிகின்றது.

**நியாயமான விசாரணை இல்லை**

போர்க் குற்றங்களில் படையினர் ஈடுபடாது விட்டால் நீதியான விசார ணையைத் துணிவுடன் எதிர்கொள்ள முடியும். ஆனால் இந்த நாட்டைப் பொறுத்தவரையில் அத்தகைய விசாரணை இடம்பெறுவதைத் தெற்கில் எவருமே விரும்பவில்லையென்பது தெளிவாகத் தெரிகிறது. இதில் தலைமை அமைச்சரும் தம்மை இணைத்துக் கொண்டுள்ளார். ஏற்கனவே இறுதிப் போரின்போது படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதை ஏற்றுக்கொண்டவர்தான் ரணில் விக்கிரமசிங்க. ஆனால் நியாயமான விசாணைகள் இடம்பெறுவதை அவர் ஏற்க முடியாதெனக் கூறியதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

பிரிட்டன் தலைமையில் இலங்கை மீது கொண்டுவரப்பட்ட தீர்மானம் மிகவும் காத்திரமானது. இதை மதித்து நடக்க வேண்டிய கடப்பாடும் கட்டாயமும் இலங்கைக்கு உள்ளது. ஆனால் இணை அனுசரணை வழங்கியதன் மூலமாகத் தீர்மானத்தை நாம் ஏற்றுக்கொள்வதாக அர்த்தம் கொள்ளக்கூடாதென ரணில் சிறுபிள்ளைத்தனமாகக் கருத்து வெளியிட்டமைதான் சிறு பிள்ளைத் தனமானது.

> போர்க் குற்றங்களில் படையினர் ஈடுபடாது விட்டால் நீதியான விசார ணை யைத் துணிவுடன் எதிர்கொள்ள முடியும். ஆனால் இந்த நாட்டைப் பொறுத்தவரையில் அத்தகைய விசாரணை இடம்பெறுவதைத் தெற்கில் எவருமே விரும்பவில்லையென்பது தெளிவாகத் தெரிகிறது. இதில் தலைமை அமைச்சரும் தம்மை இணைத்துக் கொண்டுள்ளார். ஏற்கனவே இறுதிப் போரின்போது படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதை ஏற்றுக்கொண்டவர் தான் ரணில் விக்கிரமசிங்க. ஆனால் நியாயமான விசாணைகள் இடம்பெறுவதை அவர் ஏற்க முடியாதெனக் கூறியதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

**பாதிப்பு**

நாட்டின் இறையாண் மையைப் பாதிக்காத வகையில் தீர்மா னத்தில் உள்ளவற்றை நடைமுறைப்படுத்தப் போவதாக அவர் கூறியிருப்பதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இலங்கை இனியும் தமது வசதிக்கு ஏற்றவகையில் நடந்துகொள்ள முடியாது என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட போதே நாட்டின் இறையாண்மை பாதிக்கப்பட்டுவிட்டதையும் அவர் புரிந்துகொள்ளவேண்டும். கூட்டமைப்பினருக்கு அறிவுரை வழங்குவதற்கும் அவர் தயங்கவில்லை. இந்த நாட்டின் அரசமைப்பைக் கூட்டமைப்பினர் மதித்து நடக்கவேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த அரசமைப்பு இருக்கும்வரையில் படையினரை பன்னாட்டு நீதிமன்றம் அல்லது பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாகத் தண்டிக்க முடியாதென அவர் கூறியதை ஏற்க உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் தத்தமக்கென ஓர் அரசமைப்பைக் கொண்டுள்ளன. இந்த நிலையில் அந்த நாடுகள் தமது அரசமைப்பை ஒரு கேடயமாகப் பயன்படுத்தி குற்றச் செயல்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. இலங்கைக்கும் அது பொருந்தும்.

**போருக்கு காரணம்**

பழையவற்றைக் கிளறினால் வன்முறை வெடிக்குமென அவர் கூறியதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பழைய சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்காது மூடிமறைத்ததன் விளைவாகவே இந்த நாட்டில் கொடிய போர் ஒன்று இடம்பெற்றதையும் இனப்பிரச்சினை தீவிரமாக உருவெடுத்து நிற்பதையும் தலைமை அமைச்சர் மறந்ததன் காரணம் புரியவில்லை. ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் 1983இல் இடம்பெற்ற இனக் கலவரத்தை தமிழர்கள் என்றுமே மறக்கமாட்டார்கள். எவ்வாறு முடியுமோ அந்தளவுக்குத் தமிழ்மக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். வெலிக்கடைச் சிறைச்சாலை யில் இடம்பெற்ற குரூரமான கொலைகள் அழிக்க முடியாத சாட்சியங்களாக இன்றுமுள்ளன. இவை ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சாதாரண விடயங்களாக இருக்கலாம். ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில் என்றுமே மறக்க முடியாதவை.

இதைப் போன்றுதான் இறுதிப் போரின்போது தமிழர்களுக்கு நேர்ந்த அவலங்களை எளிதில் மறக்க முடியுமா? போர்க் குற்றங்கள தும் மனித உரிமை மீறல்களாலும் பாதிக்கப்பட்ட ஆயிரமாயிரம் தமிழர்கள் இன்றும் அவற்றின் தாக்கத்திலிருந்து மீளமுடியாத நிலையில் உள்ளனர். இவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்றால் இவற்றைப் புரிந்த குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும். இதற்குக் கலப்பு நீதிமன்றங்களால் விசாரணைகள் இடம்பெற்று உரிய தண்டனைகள் வழங்கப்படல் வேண்டும். உள்நாட்டு நீதிப் பொறிமுறைகளால் இவை சாத்தியப்படுமென எதிர்பார்க்க முடியாது. இதேவேளை சில படையதிகாரிகள் மேற்கொண்ட சட்டவிரோத நடவடிக்கைகளுக்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதியான சரத்பொன்சேகா கூறியுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது. தேர்தல்கள் நெருங்கிவரும் வேளையில் தமது உண்மையான முகத்தை வெளிக்காட்டி விட்டார் ரணில் விக்கிரமசிங்க. இதை கூட்டமைப்பு புரிந்துகொள்ள வேண்டும்.

Thinking of you

Late Mr.Velayuthapillai Kumukesan



Born 18.09.1963

Died 10.03.2019

"Good people pass away; the godly often die before their time." (Isaiah:57:1-2)

You were a conscientious teacher. Wehold you in our hearts and prayers.

You will be sadly missed by the school community.

Uduvil Girls' College

Principal, Staff & Pupils

# வேலையற்ற பட்டதாரிகள் கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம்,ஏப் 4

வடக்கு மாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றிணைந்து யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று காலை இந்த போராட்டத்தை முன்னெடுத்துத்திருந்தனர்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்காமை , 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கென நிதி ஒதுக்கப்படாமை ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

“30 ஆயிரம் ஆசிரியர்கள் வெற்றிடம் இருந்தும், பட்டதாரிகளுக்கு நியமனம் எங்கே”,பட்ட படிப்புக்கு வேலை இல்லை எனில் பல்கலைக் கழகத்தை இழுத்து மூடு ,தொழிலுரிமை கிடையாதாம் இதுவா நல்லாட்சி “ போன்ற வாசகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (க-7)






## முதலமைச்சருக்கு எதிராக மருத்துவர்கள் போராட்டம்

கொழும்பு, ஏப். 4

ஊவா மாகாண முதலமைச்சருக்கெதிராக பதுளை மாவட்ட அரச மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு, கண்டன ஊர்வலமும் நேற்று நடத்தினர். முதலமைச்சர் செய்த தவறுக்குப் பகிரங்க மன்னிப்புக் கேட்கவேண்டுமென்ற கோஷத்தை எழுப்பினர்.

பதுளை அரசினர் மருத்துவமனையில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் பதுளை நகர் ஊடாக ஊவா மாகாண சபைக்கு முன்பாக நின்று போராட்டமாக மாறியது.

சுமார் 2 மணித்தியாலங்கள் நீடித்த இந்தப் போராட்டத்தால் வாகன போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

போராட்டக்காரர்கள் மாகாண சபைக்குள் நுழைய முயற்சித்த போது பதுளை பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

முதன்மை வாசல் கதவை மூடி பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர். ஊவா மாகாண சபைக்கு முன்பாக நடைபெற்ற கூட்டத்தில் மருத்துவர் பாலித கருத்துரைக்கையில், ஊவா மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஜனித்தா தென்னக்கோனை, முதலமைச்சர் தமது அலுவலகத்துக்கு அழைத்து அச்சுறுத்தியதோடு, கடும் தொனியில் அவர் நிந்திக்கப்பட்டார். அதற்கு முதலமைச்சர் மன்னிப்புக் கோரவேண்டும். தவறின் நாடு முழுதும் போராட்டம் நடத்துவோம்- என்றார்.

தெமோதரை அரசினர் மருத்துவமனை வளாகம் ஊடாக, கிராம பாதையொன்றை அமைத்துத் தருமாறு, மக்கள் மாகாண முதலமைச்சரிடம் விடுத்த கோரிக்கைக்கமைய வேலை ஆரம்பிக்கப்பட்டது. இதை தெமோதரை அரசினர் மருத்துவமனை மருத்துவ அதிகாரி தடுத்து நிறுத்தியிருந்தார். மருத்துவமனை வளாகத்தின் ஊடாக பாதை அமைக்கப்பட்டால், அது மருத்துவமனை செயற்பாடுகளுக்கும், நோயாளர்களும் பெரும் இடையூறுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படுமென்று காரணம் கூறப்பட்டது.

கிராம மக்களின் பாதை அமைப்பு கோரிக்கை நிறைவேறாவிட்டால், தெமோதரை அரசினர் மருத்துவமனை நிர்வாகத்துடன் மக்கள் முரண்படுவர் என்று மாகாண முதலமைச்சர் தரப்பில் கூறப்பட்டது.

அதனால் குறித்த பணிப்பாளரை அழைத்து பாதை அமைக்க ஆதரவு வழங்கும்படி கோரியபோது, பணிப்பாளர் நிராகரித்தார். இதனால், முதலமைச்சர் சுகாதாரப் பணிப்பாளரை அச்சுறுத்தினார் என்று கூறப்படுகிறது.

அதனையடுத்து முதலமைச்சர் அச்சுறுத்தினார் என்று சுகாதாரப் பணிப்பாளர் பதுளை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார்.

இந்த நிலையில் தெமோதரை அரசினர் மருத்துவமனை வைத்திய அதிகாரியின் இல்லம் மீது இனந்தெரியாத கும்பல் நேற்றுமுன்தினமிரவு சேதம் விளைவித்துள்ளது. தொடர்ந்து மருத்துவமனை நிர்வாகத்துக்கு எதிராக பொதுமக்கள் மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இத்தகைய இருதரப்புக் குழப்பங்களால் தெமோதரை அரசினர் மருத்துவமனை காலவரையின்றி மூடப்பட்டுள்ளது.

இதுதவிர, குறித்த முதலமைச்சர் ஏற்கனவே, பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய அதிபர் ஆர். பவானியை நிந்தித்தமை தொடர்பான வழக்கொன்று, நீதிமன்றத்தில் உள்ளது. முஸ்லிம் மாணவியை அந்தப் பாடசாலையில் சேர்க்குமாறு முதலமைச்சர் விடுத்த கோரிக்கையை, அதிபர் நிராகரித்திருந்தார். அதனால் ஏற்பட்ட முறுகல் நிலையே, வழக்குத் தாக்கல் செய்யும் நிலையை ஏற்படுத்தியது என்று கூறப்படுகின்றது.

இந்த இரண்டு விடயங்களிலும் முதலமைச்சர் பொதுமக்கள் சார்பாகவே இருந்து செயற்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (கு)

## இனவாத கருத்துக்களை திணிக்கிறது கூட்டமைப்பு

*ரத்னாயக்க குற்றச்சாட்டு*

கொழும்பு, ஏப். 4

இனவாதக் கருத்துக்களை தமிழ் மக்கள் மத்தியில் பரப்பி தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை மாத்திரமே தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னெடுக்கின்றது. கடந்த நான்கு வருட காலமாக வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் கூட்டமைப்பினர் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்னாயக்க குற்றஞ்சாட்டினார்.

பொதுமக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரப்பகிர்வின் ஊடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அபிவிருத்திகளை முன்னெடுக்கலாம் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ் மக்களிடம் இனவாத வெறுப்புக்களைப் பரப்பி அதனூடாக தமது அரசியல்த் தேவைகளை பூர்த்தி செய்யும் ஏற்பாடுகளே தற்போது இடம்பெறுகின்றன. அரசியல்வாதிகளே இனவாத கருத்துக்களை தூண்டி விட்டு அரசியல் இலாபம் தேடிக் கொள்கின்றார்கள். சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய மூன்று பிரிவிலும் இனவாதிகளே காணப்படுகின்றார்கள்என்றார். (ம)

*யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடத்தும்*

## தமிழகத்தின் நாட்டார் கலைகளின் பண்பாட்டு தொடர்பியல் ஆற்றுகை

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் சமூக விஞ்ஞானப்பிரிவு நடத்தும் தமிழக நாட்டார் கலைகளின் பண்பாட்டுத் தொடர்பியல் ஆற்றுகை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இன்று காலை 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

சென்னை பல்கலைக் கழக இதழியல் மற்றும் தொடர்பியல்துறைத் தலைவர் பேராசிரியர் கோபாலன் இரவீந்திரன் நிகழ்வில் சிறப்புரை ஆற்றவுள்ளார். (ம)

## பேராசிரியர் நந்தி நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், ஏப். 4

சென்னைப் பல்கலைக் கழக இதழியல் மற்றும் தொடர்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் கோபாலன் இரவீந்திரன் பேராசிரியர் நந்தி நினைவுப்பேருரையொன்றை இன்று ஆற்றவுள்ளார்: யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 3 மணிக்கு ‘தமிழர்களின் தொல்தொடர்பியல் மரபுகளும் சமகால தொடர்பியல் சிக்கல்களும்’ என்னும் தலைப்பில் இந்த நினைவுப்பேருரை இடம்பெறவுள்ளது. (ம)

## தலைமை நீதியரசராகிறார் அலுவிஹாரே?

கொழும்பு, ஏப். 4

புதிய தலைமை நீதியரசராக உயர்நீதிமன்ற நீதியரசர் புவனேக்க அலுவிஹாரே நியமிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய நீதியரசர் நளின் டி சில்வா எதிர்வரும் 28ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகிறார். (ம)

## 34 மினி கோப் சிற்றிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப். 4

வடக்கு மாகாணத்தில் 34 மினி கோப் சிற்றிகளை ஆரம்பித்து வைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்தது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மெகா கோப் சிற்றிகள் நிறுவப்படும். அதனைவிட மேலதிகமான மினி கோப் சிற்றிகள் ஆரம்பித்து வைப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 10, கிளிநொச்சியில் 6, முல்லைத்தீவில் 6, வவுனியா 6, மன்னார் 6 என மொத்தமாக 34 மினி கோப் சிற்றிகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் இந்த ஆண்டின் வேலைத்திட்டத்தின் கீழ், மினி கோப்சிற்றிகள் ஆரம்பித்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உள்ளூர் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப் படுத்துவதற்கான புதிய வலையமைப்புகளும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் புதிய சந்தை வாய்ப்பு இலக்குகளுக்கு அமைய யாழ்ப்பாணத்தில் 5, கிளிநொச்சியில் 3, முல்லைத்தீவு 3, வவுனியா 3, மன்னார் 3 மொத்தமாக 17 சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தும்.

கூட்டுறவு அமைப்புக்களால் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் உற்பத்திகளைச் சந்தைப் படுத்தும் நோக்கில் இந்தச் சந்தை வாய்ப்புக்களை உருவாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-17)

## மழலைகள் மகிழ்களம்

கொடிகாமம், ஏப் 4
யாழ்ப்பாணம் மீசாலை கிழக்கு நாவலர் முன்பள்ளியின் மழலைகள் மகிழ்களம் முன்பள்ளியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி அபிவிருத்தி குழுச் செயலர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பொ. நடேசலிங்கம், கொடிகாமம் நிதுர்சிகா நகைமாட உரிமையாளர் ச.ரஜனிகாந், மதிப்புறு விருந்தினர்களாக மீசாலை கிழக்கு சமுர்த்தி அலுவலகர் த.கிருபாகரன் ,பொருளாதார அபிவிருத்தி அலுவலகர் திருமதி ப.சிவரதன், குடும்பநல அலுவலகர் திருமதி சி. கலிஸ்ரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-159)

## பேச்சுத்திறன் காணும் நிகழ்வு


யாழ்ப்பாணம், ஏப்.4
பாலர் கல்விக் கழக நிர்வாகத்தில் உள்ள ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலை சிறார்களின் பேச்சுத்திறன் காணும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணம் ராஜா கிறீம் கவுஸ் மண்டபத்தில்(கம் சிகா) முற்பகல் 9 மணிக்கு தலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் இ.மயில்வாகனம் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

# ஆவா குழு உறுப்பினர்களை பிடித்த பொலிஸாருக்கு பரிசு

யாழ்ப்பாணம்,ஏப் .4

ஆவாக் குழுவைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸாரால் இனங்காணப்பட்ட இக்ரம் உள்ளிட்ட 6 பேரையும் கொழும்பு மற்றும் வவுனியாவில் பதுங்கியிருந்தவேளை கைது செய்த பொலிஸாருக்கு நேற்று முன்தினம் பணப் பரிசில் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

பொலிஸ் மா அதிபரின் பரிந்துரைக்கமைய பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸாருக்கு 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் பகிர்ந்தளிக்கப்பட்டது.
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவித்து பொலிஸாரால் தேடப்பட்டுவந்த இளைஞரான இக்ரம் உள்ளிட்ட மூவர், கொழும்பு புறநகர்ப் பகுதியில் வைத்து 2017ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.
அடுத்த இரண்டு நாள்களில் வவுனியா நகர் பகுதியில் வைத்து மேலும் மூவர் கைது செய்யப்பட்டனர்.
அவர்களில் மொகமெட் இக்ரமுக்கு எதிராக கோப்பாய் பொலிஸ் அலுவலர்களை வெட்டிக் காயப்படுத்தியமை உள்ளிட்ட 4 வழக்குகளைப் பொலிஸார் தாக்கல் செய்திருந்தனர்.
இந்தக் கைது நடவடிக்கையின் மூலம் பெரும் வன்முறைகளைத் தடுத்தமையைப் பாராட்டி யாழ்ப்பாணம், மானிப்பாய் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையங்களின் முன்னாள் பொறுப்பதிகாரிகள், குற்றத்தடுப்புப் பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவு அலுவலர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.
இதேவேளை, நாடுமுழுவதும் வன்முறையைக் கட்டுப்படுத்திய பொலிஸ் அலுவலர்களும் மதிப்பளிக்கப்பட்டனர். (க-37)



## நூறாவது ஆண்டு பாடசாலைத் தினம்

கொடிகாமம் மார்ச் 4
வரணி கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் நூறாவது ஆண்டு பாடசாலைத் தினமான ஏப்ரல் 1 ஆம் திகதி வித்தியாலய முன்றலில் மாலை 4 மணிக்கு கலாசார பொங்கல் விழா அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள் பாடசாலையின் அபிவிருத்தி சங்கத்தினர் பழைய மாணவர் சங்கத்தினர் பெற்றோர்கள் நலன் விரும்பிகள்.பாடசாலை நிறுவுநரின் வம்சாவழியினர் நலன் விரும்பிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
நூற்றாண்டு தினத்தில் 23 பானைகள் வைத்து கலாசார பொங்கல் நிகழ்வும் , பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (க-159)

## பன்னாட்டு ஒட்டிசம் தினம் யாழில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம்,ஏப் 4
பன்னாட்டு ஒட்டிசம் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார பணிமனையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வடக்கு மாகாண சபை கட்டட முன்றலில் நிகழ்வுகள் நடைபெற்றன. இதன்போது ஒட்டிசம் தொடர்பான கருத்துரைகள், மருத்துவர்களால் வழங்கப்பட்டன.
ஒட்டிசத்தில் இருந்து விடுதலையை வலியுறுத்தி நீல நிற பலூன்கள் பறக்க விடப்பட்டன.நிகழ்வில் பெற்றோர்கள், சிறுவர்கள், அரச அதிகாரிகள், மருத்துவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (க-7)



## வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம்,ஏப் 4
யாழ்ப்பாணம் திருநெல்வேலி அரசடி சிறி சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து 15 நாள்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்த திருவிழாவும் இடம்பெறும்.
திருவிழாக் காலங்களில் வசந்தமண்டப பூஜை காலை 10 மணிக்கும் , மாலை 6.15 மணிக்கும் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-37)

## திருமுறை மனனப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்4
திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே திருமுறை மனனப்போட்டி நடத்தப்படவுள்ளது.
வண்ணை- சாந்தையர் மடம்சிறிகற்பகவிநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் சைவச் சிறார்களின்மனனம்செய்யும் ஆற்றலையும் சைவ சமய அறிவை விருத்தி செய்யும்பொருட்டும்இந்த போட்டியை நடத்தவுள்ளது.
போட்டிதரம்1, 2 பாலர்பிரிவிலும், தரம் 3,4 கீழ்ப்பிரிவிலும்நடத்தப்படவுள்ளது. பாலர் பிரிவுக்கு 'மாசில் வீணையும்மாலைமதியமும்' 'சொற்றுணை வேதியன் சோதி வானவன்' ஆகிய இரு திருமுறைகளும்,கீழ்ப்பிரிவுக்கு'கூற்றாயினவாறு விலக்ககிலீர்', நிலைபெறுமா றெண்ணுதியேல்' ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.
திருமுறைமனனப்போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி பிற்பகல்2மணிக்குயாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நாளை 5 ஆம்திகதியாகும்.
திருமுறை மனனப் போட்டியில்பங்குபற்றவிரும்புபவர்கள்சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம் இல. 82 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெறுங்கொள்ளலாம்என சைவ சமய அபிவிருத்திக் கழக சமய பிரசாரகரும் பரீட்சைச் செயலருமான சு. சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (ஐ)

### திருமணம் செய்கிறேன் என்று கூறி

# பெண்களை ஏய்க்கும் பண மோசடி ஆசாமியை மணப் பெண் வேடமிட்டு மடக்கியது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஏப்.4
மணப்பெண் தேவை என்று விளம்பரப்படுத்தி அதை பார்த்து வரும் பெண்களை ஏமாற்றி பண மோசடி செய்தார் என்ற குற்றச் சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.
காங்கேசன்துறைப் பொலிஸாரால் சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.
காங்கேசன் துறையைச் சேர்ந்த பெண் பொலிஸ் அலுவலகர் ஒருவர் திருமணப் பெண்ணாக பாசாங்கு செய்து குறித்த நபரை கோவிலுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். இதனையடுத்து அங்கு வந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.
மணப் பெண் தேவை என்று பத்திரிகையில் வந்த விளம்பரம் ஒன்றைப் பார்த்த பெண் வீட்டார் அதில் போடப்பட்ட அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு கதைத்து திருமணத்துக்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.
இந்த நிலையில் சீதனப் பணமான 9 இலட்சம் ரூபாவை உடன் தருமாறு மணமகன் கேட்டுள்ளார். இதனையடுத்து அந்தப் பணத்தை வைப்பிலிட்டுள்ளனர் பெண்வீட்டார். திருமணத்துக்கும் நாள் பார்க்கப்பட்டது. எனினும் மாப்பிள்ளையுடன் தொடர்பு கொள்ளமுடியவில்லை.
அலைபேசி இலக்கமும் செயலிழந்திருந்தது. அவருடைய வீட்டுக்குச் சென்ற போது அங்கும் அவர் இல்லை.
சந்தேகம் கொண்ட பெண் வீட்டார் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர். பொலிஸார் விசாரணைகளில் இறங்கினர். அவருடைய அலைபேசி இலக்கத்தை வைத்து விசாரணைகளை ஆரம்பித்தனர். அவர் தற்போது பயன்படுத்தும் அலைபேசி இலக்கத்தை பெற்றுக் கொண்டனர்.
காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் பிரிவில் கடமையாற்றும் பெண் பொலிஸாரின் உதவியை நாடினர். அவர் மற்றுமொரு கல்யாணப் பெண்போன்று பாசாங்கு செய்து அவருடன் உரையாடினார்.
ஆசைவார்த்தைகளை கூறி. பெண் பார்க்க அவரை அழைத்தார். நேற்றுமுன்தினம் மருதடி பிள்ளையார் ஆலயத்தில் பெண் பார்க்கும் படலம் இடம்பெற்றது.
அங்கு வந்த சந்தேகநபரை மறைந்திருந்த காங்கேசன் துறைப் பொலிஸார் கைது செய்தனர்.
விசாரணைகளில் அவர் விவாகரத்துப் பெற்றவர் என்பது தெரியவந்திருக்கின்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபர் அராலிப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் கூறுகின்றனர். (ஐ-21.26)

## ஹெரோய்ன் வைத்திருந்த இருவருக்கு மறுவாழ்வு

யாழ்ப்பாணம்,ஏப் 4

ஹெரோய்ன் வைத்திருந்த இருவரை சீர் திருத்தத்துக்காக பொலன்னறுவை மறுவாழ்வு மையத்தில் சேர்க்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 30 ஆம் திகதி 400 மற்றும் 320 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் சிறப்பு குற்றத் தடுப்பு பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் தெல்லிப்பழை பொலிஸில் பாரப்படுத்தப்பட்டு மறுநாள் நீதி மன்றில் முற்படுத்தப்பட்டு, குற்றப் பத்திரம் தாக்கல் செய்யும் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

வழக்கு மல்லாகம் நீதி மன்றில் விசாரணைக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேக நபர்கள் குற்றத்தை ஒத்துக்கொண்டனர்.

இதனையடுத்து இருவரையும் பொலன்னறுவை கந்தைக்காடு மறுவாழ்வு நிலையத்தில் ஒருவருடம் சீர்திருத்தத்துக்காக அனுப்பி வைக்கப்படுவதாக மன்று தீர்ப்பளித்தது. (ஐ-7,26)

## விளையாட்டு நிகழ்வு

தென்மராட்சி, ஏப்.4

கைதடி வளர்மதி முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு முன்பள்ளி மைதானத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். வளர்மதி சனசமூக நிலையப் போசகர் சி.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-9)

## பொதுக்கூட்டம்

மட்டுவில் சந்திரபுரம் முதியோர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று பகல் 10 மணிக்கு சந்திரபுரம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு பிரதேச சமூக சேவைகள் அலுவலர் மற்றும் பிரிவ் கிராம அலுவலர் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர் எனவும், கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# வேலணைப் பிரதேச சபைக்குரிய 100 வாகனங்களின் நிலை என்ன?

## கணக்காய்வுத் திணைக்களம் ஆராயவேண்டும் என்கிறார் சரா எம்.பி.

யாழ்ப்பாணம், ஏப். 4

வேலணைப் பிரதேச சபையில் 100க்கும் மேற்பட்ட வாகனங்கள் இருப்புப் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று அறிகிறேன். அவை தற்போது என்ன நிலையில் உள்ளன என்பதைச் சபை உறுப்பினர்கள் அறிய வேண்டும். உள்ளூராட்சி ஆணையாளர், கணக்காய்வாளர் அதிபதிநாயகம் ஆகியோர் வாகனங்களின் உண்மையான பயன்பாடு குறித்து ஆராய்வு செய்ய வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்தார்.

புங்குடுதீவு றோமன் கத்தோலிக் கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு பாடசாலை முதல்வர் ந.மயூரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் சரவணபவன் எம்.பி மேலும் தெரிவித்ததாவது:

புங்குடுதீவு றோமன் கத்தோலிக் கத் தமிழ்க் கலவன் பாடசாலை 100வருடங்கள் பழைமை வாய்ந்தது.

காலத்தின் தேவை கருதி அது நவீனமயப்படுத்தப்பட வேண்டும். புதிய கட்டடத்தின் தேவை குறித்து கொழும்பு அரசின் கவனத்துக்கு விரைவில் கொண்டு வருவேன். ஊரெழுச்சித் திட்டத்தின் கீழ் 10 லட்சம் ரூபா ஒதுக்கித் தருவதுடன் நூலக அபிவிருத்திக்கு ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கித் தருவேன்.

### சோர்வடையும் மாணவர்கள்

வறிய வாழ்வாதார நிலைகளில் உள்ள குடும்பங்களில் மாணவர்கள் காலை உணவு தேவையான அளவு உட்கொள்ளாது, போசாக்கின்றி பாடசாலைகளுக்கு வருகின்றனர். அவர்கள் முற்பகல் 10 மணியளவில் சோர்வடைகின்றனர்.

இங்குள்ள பரோபகாரிகள், தொழில் அதிபர்கள் பின்தங்கிய பாடசாலைகள் மாணவர்களின் போசாக்கு, காலை உணவு தொடர்பில் இயலுமான நடவடிக்கை எடுப்பது சாலச் சிறந்தது. கொழும்பு அரசின் கல்வி அமைச்சருக்கு இந்தவிடயம் தொடர்பில் தெரியப்படுத்தி அபிவிருத்தி செய்து உதவுவேன் -என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் க.நாவலன், புங்குடுதீவு மத்தி-கிழக்கு கிராம அலுவலர் எஸ். சிவா, உலக மைய தலைவர் பி. சதீஷ், வண.பிதா செபஜீவன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். முதன்மை விருந்தினர் சரவணபவன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கேடயங்களையும் கிண்ணங்களையும் வழங்கி மதிப்பளித்தார். (து-50)



## நாகர்கோவிலில் 9 குடும்பங்கள் குடிக்கத் தண்ணீர் இன்றி அவலம்

மருதங்கேணி,ஏப்.4

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் நாகர்கோவில் கிழக்குப்பகுதியில் எந்தவித அடிப்படை வசதிகளும், குடிக்க தண்ணீரும் இன்றி இரண்டு வருடங்களுக்கு மேலாக ஒன்பது குடும்பங்கள் வசித்து வருவதாகவும் அவர்களுக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொடுக்க எவரும் முன்வரவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

நாகர்கோவில் கிழக்கில் காணி இன்றி வசித்த 12 குடும்பங்களுக்கு, இரண்டு பரப்பு காணிகள் வீதம் வழங்கப் பட்டன. இதில் ஒன்பது குடும்பங்கள் சிறிய குடிசைகள் அமைத்து வசித்து வருகின்றனர்.

இவர்களுக்குப் பிரதேச செயலகத்தால் மலசல கூடங்கள் மட்டும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்த மலசல கூடங்களை பயன்படுத்துவதற்கு கூடத் தண்ணீர் வசதி இல்லாமையால் மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். தமது குடி தண்ணீர் தேவைக்காக வெற்று தகர பீப்பாய்களை மணல் நிலத்தில் புதைத்து, அதிலிருந்து நீரைப் பெற்றே குடி தண்ணீருக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும் அங்கு வசிக்கும் குடும்பங்கள் மின்சார வசதி இன்மையால் மண்ணெண்ணெய் விளக்குகளையே பயன்படுத்தி வருகின்றன.

அவர்கள் பயன்படுத்துவதற்கான போக்கு வரத்து பாதைகள் கூட அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

அந்தப் பகுதி மக்கள் இப்போதும் ஏதிலி வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றனர்.

தற்போதைய அதிக வெயில் காரணமாக சிறுவர்களுடன் வசிக்கும் அனேக குடும்பங்கள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

பிரதேச செயலகத்தால் இனி வர இருக்கும் வீட்டுத் திட்டத்தில் வீடுகள் வழங்க உள்ளதாக கிராம அலுவலர் தெரிவித்து, தம்மிடம் ஆவணங்களை பெற்றுக் கொண்டதாகவும் இது சற்று ஆறுதல் அளிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் துயரமான வாழ்வைக் கருத்தில் கொண்டு சம்மந்தபட்டவர்கள் உரிய உதவிகளை செய்து தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-160)

## புடவை வியாபாரத்தில் ஈடுபடப் பொருத்தமான இடத்தைத் தாருங்கள்

### நடைபாதை வியாபாரிகள் சாவகச்சேரி நகரசபையிடம் கோரிக்கை



சாவகச்சேரி ஏப்.4

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு உடுபிடவைகள் வியாபாரம் செய்வதற்கு பொதுமக்கள் வந்து செல்லக்கூடிய பொருத்தமான இடத்தினை வழங்குமாறு நடைபாதை வியாபாரிகள் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளரைக் கேட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

நகரசபை கடந்த பண்டிகைக் காலத்தில் நடைபாதை வியாபாரம் செய்ய தொடருந்து நிலைய வீதியோரத்தை வழங்கியிருந்தது.

இந்நிலையில் குறித்த பகுதியில் பெருமளவு பொதுமக்கள் வந்தபோதிலும் அந்த வீதியில் அடிக்கடி செல்லும் வாகனங்களால் பொதுமக்களும் நாங்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கநேர்ந்தது.

இந்நிலையில் பொதுச் சந்தைக்கு அருகில் உள்ள விளையாட்டு மைதானத்தின் பின்பகுதியில் இடமொதுக்கித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் பண்டிகை வேளைகளில் சந்தை வளாகத்தில் நடைபாதை வியாபாரம் செய்ய வெளியூர் வியாபாரிகள் அனுமதிக்கப்பட்டனர்.

சந்தை வளாகத்தினுள் வெளியூர் நடைபாதை வியாபாரிகளை அனுமதிப்பதால் தமது வியாபாரம் பாதிப்பு ஏற்படுகிறது என அங்குள்ள வர்த்தகர்கள் கோரியதையடுத்து கடந்த ஐந்து வருடங்களாக விளையாட்டு மைதானக் காணியில் நடைபாதை வியாபாரம் நடத்த அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த வருடம் விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றதால் சபை அலுவலகத்துக்கு அருகில் உள்ள தொடருந்து வீதியில் சித்திரைப் புத்தாண்டு, தீபாவளி, தைப்பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் நடைபாதை வியாபாரிகள் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை வடபகுதி வர்த்தகர்களின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதால் பண்டிகைக் காலங்களில் வெளிமாவட்ட வர்த்தகர்களுக்கு வடபகுதியில் அனுமதி வழங்க வேண்டாம். என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட வணிகர் கழக உப தலைவருமான ஆர். ஜெயசேகரன் உள்ளூராட்சி திணைக்களங்களிடம் நேற்றுமுன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-9)

## பல்கலையில் கையொப்பம் இடும் இயந்திரம் உடைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உள்ள கைவிரல் அடையாள பதிவு இயந்திரம் உடைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பல்கலைக்கழக பதிவாளர் காண்டீபனால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடந்த முதலாம் திகதி முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக வளாகத்தில் நிர்வாக மண்டபத்தில் பொருத்தப்பட்டிருந்த கைவிரல் அடையாள பதிவு இயந்திரமே இவ்வாறு இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கைவிரல் அடையாள பதிவு இயந்திரத்தின் மூலம் வருகை மற்றும் மீள் செல்கையினை பதிவு செய்தல் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் உள்வாங்கப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கையை பாரபட்சமாக நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட பல செயற்பாடுகளுக்கு எதிராக அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் போராட்டம் நடத்தியிருந்தனர். (ஐ-106)

## வேலணைப் பகுதியில் மீண்டும்

# மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன

### பிரதேச வாசிகள் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம்,ஏப். 4**

**வேலணைப் பிரதேசத்தில் மீண்டும் மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படும் செயற்பாடு அதிகரித்துள்ளதாகப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வேலணை ஒருதீவகப்பிரதேசமாக காணப்படுகிறது. கால் நடைகள் அதிகமாக வளர்க்கப்படுவதுடன் கட்டாக்காலி மாடுகள் அதிமாக உள்ளன. ஆகவே பல்வேறு தேவைகளுக்காக தீவகத்துக்கு வருபவர்கள் மாடுகளை களவாடிச் செல்கின்றனர். இவை தவிர மாடுகள் களவாடப்பட்டு இறைச்சி ஆக்கப்பட்டு அதன் தோல், எலும்புகள் பொது இடங்கள், பற்றைகளில் வீசப்படுகின்றன. இதனால் சுகாதார சீர்கேடும் இடம்பெறுகிறது. அத்துடன் வாழ்வாதாரத்துக்கு வளர்க்கப்படும் மாடுகளும் களவாடப்படுகிறன. மாடுகள் உயிரோடு கொண்டு சென்றால் பிரச்சினை என்று அறிந்து அதனை இறைச்சி ஆக்கி கடல் வழியாகவும், தரை வழியாகவும் கொண்டு செல்கிறார்கள்.

கடந்த சில மாதங்களாக இந்தச் செயற்பாடு கட்டுப்பாட்டுக்குள் இருந்த நிலையில் தற்போது மீண்டும் மாடுகள் களவாடப்பட்டு இறைச்சியாக்கும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. மாடுகள் களவாடப்படுவது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டாலும் அவர்கள் சில நாள்கள் விசாரணை செய்து விட்டு அப்படியே விட்டுவிடு வார்கள்- என்றனர்.

இந்த விடயம் தொடர்பில் வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் ச.அசோக்குமார் தெரிவித்ததாவது:

கட்டாக்காலி மாடுகளை பிடித்து வாழ்வாதாரத்துக்காக ஏலத்தில் வழங்குவது தொடர்பில் வேலணைப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாடுகள் சில பிடிக்கப்பட் டன பின்னர் அந்த தீர்மானம் சபையால் நிரா கரிக்கப்பட்டது. வேலணை மத்திய கல்லூரியின் விடுதியின் பின்புறமாக உள்ள பகுதி மற்றும் சரவணை பகுதிகளில் மாடுகள் வெட்டப்பட்டதற்கான தோல்,



*சுகாதாரச் சீர்கேடான முறையில் வீசப்படுகின்ற மாட்டின் எச்சங்கள்*

விலா எலும்பு, போன்ற பகுதிகள் கண்டு பிடிக்கப்பட்டன. இது தவிர வேலணைப் பிரதேசத்தில் உள்ள பற்றைகளில் மாட்டின் எச்சங்கள் காணப்படுகின்றன - என்றார். எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-7)

# வலி. தென்மேற்குப் பிரதேச ஒன்பது வீதிகள் சீரமைப்பு

வலி.மேற்கு, ஏப். 4

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் 17 மில்லியன் ரூபா செலவில் 9 வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

துரித கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வழங்கிய நிதியுதவியிலேயே இந்த வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்த திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் 14 பிரதேசங்களிலுள்ள பெரும்பாலான வீதிகள் பல மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

வலி.தென் மேற்கு பிரதேசத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ. சரவணபவன், த.சித்தார்த்தன் ஆகியோரால் ஏற்கனவே வழங்கப்பட்ட நிதியுதவி மூலம் 50 வீதிகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வலி. தென் மேற்கு பிரதேசத்துக்கு தற்போது மாவை சேனாதிராசாவால் வழங்கப்பட்ட ரூபா 17 மில்லியனில் 9 வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன.

காளிகோயில் வீதி, வில்வளை வீதி, உப்புத்தறை வீதி, ஆத்தோயோவை வீதி, இளவாலைபாடசாலைவீதி, உடையார்ஒழுங்கை, போயிற்றி வீதி, முல்லானை சேமக்காலை வீதி ஆகிய எட்டு வீதிகளும் ரூபா. 160 இலட்சம் ரூபா செலவிலும் மாரீசன் கூடல் பாலக் கட்டை வீதி ரூபா 10 இலட்சம் ரூபா செலவிலும் சீரமைக்கப்படவுள்ளன. (ஐ-50)

# மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஏப். 4

யாழ்ப்பாண மாவட்டத்தில் மரக்கறி வகைகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளன. தற்போதைய காலநிலைக்கு ஏற்றவாறு கூடுதலான செய்கையாளர்கள் இந்தக் காலபோக மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். தற்போது இந்த மரக்கறி வகைகளின் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அறுவடை செய்யப்படும் மரக்கறி வகைகள் தாரளமாகச் சந்தைக்கு வந்தும் சேர்கின்றன என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

கோவா, தக்காளி கத்தரி பயிற்றை பாகல் புடோல் லீக்ஸ், கரட் பூசணி, நீத்துக்காய், வெண்டி, கீரை, பச்சைமிளகாய், வெங்காயம் போன்ற மரக்கறி வகைகள் அதிகளவில் சந்தைக்கு வந்து சேர்வதால் அவற்றின் விலைகள் திடீரெனச் சரிந்துள்ளன.

திருநெல்வேலி, சங்கானை, மருதனார்மடம், சுன்னாகம், சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற சந்தைகளுக்கு அதிகளவில் மரக்கறி வகைகள் வந்து சேர்வதால் அவற்றின் விலைகள் யாவும் நூறு ரூபாவுக்கு உட்பட்டே விற்கப்படுகின்றன.

முருங்கைக் காயின் விலையும் சடுதியாகக் குறைந்துள்ளது. முன்னர் கிலோ 500 ரூபாவாக விற்கப்பட்ட முருங்கைக்காய் 250 ரூபாவாக குறைந்துள்ளது. இதேசமயம் ஆலயங்களில் பெருந்திருவிழாக்கள் இடம் பெற்று வருவதாலும் சுப காரியங்கள் நடைபெறும் மாதம் என்பதாலும் மரக்கறிப் பாவனை அதிகரித்துள்ளது. (ஐ-17)

# கவிதை நூல் வெளியீடு

கொடிகாமம், ஏப் .4

வன்னி மண்ணின் போர் அவலங்களை பாடும் வல்லைக்கமல் எழுதிய - குருதிநிலம் -கவிதை நூல் வெளியிடப்படவுள்ளது.

வல்வெட்டித்துறை நவீன சந்தை கேட்போர் கூடத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இலங்கை வங்கியின் வடக்கு மாகாண முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் தலைமையில் நஸ்ட பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் கவிஞர் இ.த.ஜெய சீலன், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் க. பத்மகாந்தன், உடுத்துறை மகா வித்தியாலய அதிபர் வே. புவனேந்திரராசா, வல்வெட்டித்துறை தபால் நிலைய தபால் அதிபர் அ. அருளானந்தசோதி மதிப்புறு விருந்தினராக வடக்குமாகாண சபைமுன்னாள் உறுப்பினர் பா.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீட்டு உரையினை ஜீவநதி கடல் ஆசிரியர் க.பரணீதரனும், மதிப்பீட்டுரையினை தேவரையாளி இந்துக் கல்லூரி ஆசிரியர் கே. எம்.செல்வதாசும் நிகழ்த்தவுள்ளனர். (ஐ-159)



# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

அளவெட்டி,ஏப். 4

யாழ்ப்பாணம் பனை அபிவிருத்தி சபையின் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் பனை அபிவிருத்திச் சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்றது. இணைத்தலைவர்களான பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ஆ.ந. இராசேந்தி ரம், யாழ்ப்பாண மாவட்டம் கூட்டுறவுத் திணைக்கள ஆணையாளர்பொ. வாகீசன் ஆகியோர்தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில்பனைசார்உற்பத்திப்பொருள்களுக்கான ஏற்றுமதிதொடர்பான விளக்கவுரையை இலங்கை ஏற்றுமதிச் சபை உதவிப் பணிப்பாளர் க. கனோஜன் வழங்கினார். வடக்கு மாகாணத்தில் உள்ள பனைதென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கங்கள், கொத்தணிகள், சமாசங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள்பனைசார்உற்பத்தியாளர்கள்எனப் பலரும் கலந்துகொண்டு தமது கருத்துகளை பகிர்ந்துகொண்டனர். (ஐ-63)

## 2020 இல் சாவகச்சேரியை

# பொலித்தீன் பாவனையற்ற நகரமாக மாற்றுவோம்

### சபையினர் முடிவு

சாவகச்சேரி,ஏப். 4

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனையை முற்றாக ஒழித்து 2020 ஆம் ஆண்டு பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் அற்ற நகரமாக சாவகச்சேரியை மாற்றுவோம். என்று சாவகச்சேரி நகரசபையினர் முடிவெடுத்துள்ளனர்.

கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் கோர் நிறுவனத்தினருடன் இணைந்து சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரச, தனியார் அலுவலகங்கள் மற்றும் வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், பொது அமைப்புக்கள் போற்றவற்றில் பொலித்தீன் பிளாஸ்ரிக் பொருள்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வுகளை நடத்தி வருகின்றனர்.

இதுவரை 37 இடங்களில் விழிப்புணர்வுக் கருத்தமர்வுகள் நடத்தப்பட்டன. இந்த வருட இறுதிக்குள் 100 விழிப்பு ணர்வுக் கருத்தமர்வுகளை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

எதிர்வரும் 22 ஆம் திகதி பன்னாட்டு புவி தினத்தை முன்னிட்டு அன்றைய தினம் விழிப்புணர்வு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் தீர்மானித்துள்ளனர். சபை எல்லைக்குட்பட்ட உணவகங்களில் லஞ்சீற் பாவனை முறை கடந்த ஜனவரி முதல் நீக்கப்பட்டு இலைகள் பயன்படுத்தும் முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

உணவக உரிமையாளர்கள் இந்தத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர். உணவகங்கள் மட்டுமன்றி சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மண்டபங்களில் வாழை இலைகள் பாவனை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் அனைத்து வர்த்தக வியாபார நிலையங்களில் நடைமுறைப்படுத்தப்படும் -என்றனர்.

அனைத்து அரச அலுவலகங்கள், பாடசாலைகள், மருத்துவமனை, வர்த்தக நிலையங்கள், தனியார் நிறுவனங்கள் தமது அலுவலகம் முன்பாக உக்கக் கூடிய உக்காத கண்ணாடிப் பொருள்களைத் தரம்பிரித்து தனித்தனித் தொட்டிகளில் போடவேண்டுமெனவும் அவ்வாறன நிலையில் உள்ள தொட்டிகளில் காணப்படும் கழிவுப் பொருள்கள் மட்டும் சபையினரால் அப்புறப்படுத்தப்படுமெனவும் தெரிவித்தனர். (ஐ-9)

# பொங்கல் உற்சவம்

வடமராட்சி,ஏப். 4

வடமராட்சிப் புலோலி வாணர்குடியிருப்பு சொக்கன் கலட்டி அருள்மிகு சிறி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இம் முறையும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி மறுநாள் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு சிறப்பு பூசை இடம்பெற்று ஒரு மணிக்கு நிறைவுபெறும். (ஐ-173)

## தவக்கால தியானங்கள்

# மனம் திரும்புதல்

தேடிவரும் இறைவனோடு இணைய எமது மனித இயல்புகளை களைந்து ஆவிக்குரிய இயல்பை பெற பாவங்களுக்காக மனவருந்துவோம்.

காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என்று அவர் கூறினார் (மாற்.1:15). இயேசுவின் நற்செய்தி பணியின் தொடக்க முழக்கமே மனமாற்றத்திற்கான அழைப்பாகவே இருக்கிறது. ஏனெனில் இறையாட்சி இவ்வுலகில் மலர வேண்டுமாயின் மனவருத்தமும், பாவமன்னிப்பும் மிகவும் அவசிமாகிறது.

எனவேதான் கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதாமல் மனிதரானார். அவரது வருகை இறையாட்சி வருகையாக இருந்தது. பாவத்தை போக்கும் ஆட்டுக்குட்டியானார் (யோவா (1:29). மனிதருக்காக தமது குருதியைச் சிந்தினார். தன்னையே பரிகார பலியாக தந்தைக்கு ஒப்புக் கொடுத்தார். (உரோ 5:68). சிலுவை சாவில் வழியாக பாவத்தின் மீதும் அதன் விளைவாக ஏற்படும் சாவின் மீதும் வெற்றிக்கண்டார். இறைவனோடு எம்மை ஒப்புரவாக்கினார் (உரோ5:10)

காணாமல்போன ஆட்டை தேடியதை போல காணாமல் போன மகனை ஏக்கத்தோடு தேடியதை போல இறைவன் எம்மைத் தேடி வருகின்றார். தேடி வரும் இறைவனோடு இணைய நமது மனித இயல்புகளை களைந்து ஆவிக்குரிய இயல்பை பெற பாவங்களுக்காக மனவருந்துவோம்.

எழுந்து என் தந்தையிடம் போவேன் எனக் கூறிச்சென்ற ஊதாரி மகனைப்போல தந்தை இறைவனிடம் திரும்புவோம். கடவுளே உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும், உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களை துடைத்தருளும் (திபா. 51:1) என்று மன்றாடுவோம்.

### வவுனியாவில் ஒரு மாத காலத்தில்

# 19 கிலோ கஞ்சா மீட்பு ஒன்பது நபர்கள் கைது

வவுனியா,ஏப்4

வவுனியாவில் கடந்த ஒருமாத காலப்பகுதியில் 19 கிலோ கேரள கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், அதனை உடமையில் வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 9 பேரைக் கைது செய்துள்ளனர்.

கஞ்சா போதைபொருள்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து அரச,தனியார் பேருந்துகள் மூலம் தென்பகுதி நோக்கி கடத்திச்செல்லபடும் போதே பொலிஸாரால் கைப்பற்றபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று வவுனியா மூன்றுமுறிப்பு பகுதியில் 6 கிலோ கஞ்சா கைப்பற்றபட்டுள்ளதாக வவுனியா பிராந்திய போதைத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த பொலிஸார் யாழில் இருந்து தென்பகுதி நோக்கிச்சென்ற தனியார் அரைசொகுசு பேருந்தை நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் வவுனியா மூன்றுமுறிப்பு பகுதியில் வழிமறித்து அதில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட போதே கஞ்சா கைப்பற்றபட்டுள்ளது.

இதனை உடமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொல்காவல பகுதியைச் சேர்ந்த 51 வயதான நபர் ஒருவரும் கைதுசெய்யபட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் ஆயர்படுத்தபடவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்றுக் காலை வவுனியா மகா றம்பைக்குளம், கொக்குவெளி ஆகிய பகுதிகளில் 1.190 கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகவும் அதே பகுதிகளைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளதாகவவுனியாப்பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த ஒரு மாத காலபகுதியில் 5 கிராம் 965 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் வவுனியாவில் கைப்பற்றபட்டுள்ளதுடன், 4 பேர் கைது செய்யபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-110)

## காபன் வரி அதிகரிக்கப்பட்டமைக்கு கினிகத்தேனவில் எதிர்ப்பு பேரணி

பொகவந்தலாவ,ஏப்.4

புதிய பாதீட்டின் மூலம் காபன் வரி அதிரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கினிகந்தேன நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் வாகன பேரணியும் நேற்றுக் காலை இடம் பெற்றது. அரசினால் அதிகரிக்கப்பட்ட காபன் வரியின் மூலமாக பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் அனைவரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (கு)





# எங்கள் தேசத்தை குணமாக்கும் பெரும் பொறுப்பு உங்களிடமே

### ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

எங்கள் தேசத்தை திரும்பவும் குணமாக்கும் பாரிய பொறுப்பு உங்களிடம் தான் உண்டு என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள யாழ். மருத்துவக் கண்காட்சியை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் 40 ஆவது வருட நிறைவை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. நிகழ்வில் கலந்துகொண்ட ஆளுநர் உரையாற்றுகையில்:

படித்த வசதியுள்ள மக்கள் இந்த நாட்டைவிட்டுச்சென்றுவிட்டனர். ஒருசிலர் மட்டுமே நம் தேசத்துக்கு சேவை செய்வதற்காக இங்கு வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். நான் வரும் போது மண்ணின் மைந்தன் இல்லை என்று உங்களில் படித்தவர்கள் சிலர் குறிப்பிட்டுவிட்டனர். நான் மண்ணின் மைந்தனாக இருக்கவில்லை என்றாலும் பறவாயில்லை ,மக்களின் மனதில் இருக்கும் ஒரு மைந்தனாகவே இருக்க விரும்பிகின்றேன். ஆகையினாலே உடைந்து போயுள்ள எங்கள் தேசத்தை, உடைக்க வைத்த எங்கள் தேசத்தை திரும்பவும் குணமாக்கும் பாரிய பொறுப்பு உங்களிடம் உண்டு. அந்த பொறுப்பின் பயணத்தில் எத்தனையோ சவால்களும் உண்டு என்று தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் 900 மருத்துவர்கள் ,ஆயிரம் தாதியர்கள் தேவைப்படுகின்றனர். இவை எங்களுக்கு சவாலாக அமைந்துள்ளது என்றும் ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார். (க)

# கலைப்படைப்புக்களை கட்டுப்படுத்தாதீர்கள்!

### எழுத்தாளர் கைதைக் கண்டித்து சுதந்திர ஊடக இயக்கம் அறிக்கை

கொழும்பு, ஏப். 4

கலைப் படைப்பாளியும் எழுத்தாளருமான ஷக்திக சத்குமார கைது செய்யப்பட்டமை, விளக்கமறியலில் வைக்கப்பட்டமையை சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

அவர் எழுதிய சிறுகதை ஒன்று முகப் புத்தகத்தில் பிரசுரமானதைத் தொடர்ந்து அந்தக் கதை பௌத்த தர்மத்தை அவமதிப்பதாக உள்ளது என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 9ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை அதிருப்தியளிப்பதாய் உள்ளது என்று சுதந்திர ஊடக இயக்கம் அறிவித்துள்ளது.

சுதந்திர ஊடக இயக்கத்துக்கு கிடைத்துள்ள தகவலின் படி ஷக்திக சத்குமார பொல்ஹவெல பொலிஸாரால் பன்னாட்டு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சாசனத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு ஏப்ரல் 9ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். பன்னாட்டு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சாசனத்தில் கையெழுத்திட்டத்தின் மூலம் இலங்கை பன்னாட்டுக்கும் இலங்கை மக்களுக்கும் அளித்த வாக்குறுதி கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் இந்தச் சாசனத்தின் மூலம் மென்மேலும் பலப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும் என்பதே.

ஆனால் இந்தச் சம்பவத்தின் மூலம் கருத்து வெளியிடும் உரிமையை இந்தச் சாசனம் சவாலுக்கு உட்படுத்தி உள்ளது என்பதை தெளிவுபடுத்துகின்றது. ஒரு கலைப்படைப்பின் உள்ளடக்கம் பற்றி ஏதாவது ஒரு பிரச்சினை தோன்றினால் அது தொடர்பாக முடிவு செய்வதற்கு ஒரு கண்ணோட்டத்தில் இருந்து மட்டும் அதனை நோக்க முடியாது. இந்த விடயத்தில் அரசு அதனைக் கருத்தில் கொள்ளாமலேயே செயற்பட்டுள்ளது.

கலை இலக்கிய படைப்புக்கள் மற்றும் சுதந்திர சிந்தனையாளர்களின் ஆக்கங்கள் தொடர்பாக அரசு ஆய்வுகளற்ற முறையில் முடிவெடுத்துள்ளது என்பதையும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை அரசு தொடர்ச்சியாக மீறுகிறது என்பதையும் சுதந்திர ஊடக இயக்கம் பல சந்தர்ப்பங்களிலும் சுட்டிக்காட்டியுள்ளது. இந்தத் தன்னிச்சையான நடவடிக்கை எடுப்பதை இனியும் தொடர வேண்டாம்என்றுஅனைத்து அரச அதிகாரிகளையும் சுதந்திர ஊடக இயக்கம் மீண்டும் கேட்டுக்கொள்கிறது என்று சுதந்திர ஊடக இயக்கம் கேட்டுள்ளது. (து)

# நேர்மையாகச் செயற்படுவீர்களானால் பாதீட்டுக்கு எதிராக வாக்களியுங்கள்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 4

அரசு மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்து தேர்தல் நாடகத்தை அரங்கேற்றி வருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையாக நேர்மையாகச் செயற்படுவதாக இருந்தால் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கத் தயாரா? இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செ.கஜேந்திரன்.

யாழ்ப்பாணம் கொக்குவிலிலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு- செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் நாடாளுமன்றில் தற்பொது நடைபெற்று வருகின்றது. அந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், அரசு அதைச் செய்கிறது இதைச் செய்கிறது இதனைச் செய்யவில்லை அதனைச் செய்யவில்லை என்றெல்லாம் அரசின் மீது குற்றச் சாட்டுகின்றனர்.

தேர்தல்கள் நெருங்கி வருவதால் மக்களை ஏமாற்றுவதற்கான நடாகங்களாகவே அவற்றை நாம் பார்க்கின்றோம். அரசையும் குற்றவாளிகளையும் இதுவரை பாதுகாத்து வருவதே கூட்டமைப்பு தான். இந்த வரவு -செலவுத் திட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதுவும் இல்லை என்றால் அல்லது தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்படுகின்றதென்றால் அத்தகைய வரவு செலவுத் திட்டத்தை ஏன் ஆதரிக்கின்றீர்கள்? எதிர்த்து வாக்களிப்பதற்குத் தயாராக உள்ளீர்களா?

வாக்கு வங்கிக்காக மக்களை ஏமாற்றுவதற்காக தங்களால் ஆன அனைத்தையும் செய்வார்கள். அதனடிப்படையிலையே வரவு- செலவுத் திட்டத்தை விமர்சித்தும் குற்றஞ் சாட்டியும் வருகின்றனர்.

இறுதியில் அந்த வரவு -செயவுத் திட்டத்துக்கு ஆதரவாகத் தான் வாக்களிப்பார்கள். வரவு- செலவுத் திட்டத்திதை நிறைவேற்றப் போதுமான ஆதரவு வாக்குகள் இருந்தால் சில வேளைகளில் தாம் அதனை எதிர்ப்பது போலவும் பாசாங்கு காட்டுவார்கள். ஆனால் அரசுக்கு நெருக்கடி வருகின்ற போது நிச்சயம் அரசுக்கு ஆதரவாகத் தான் செயற்படுவார்கள்.

கூட்டமைப்பின் ஏமாற்று வித்தையை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் -என்றார். (து-ரி)

### விபத்தில் காயமடைந்த 70 வயது மூதாட்டி சிகிச்சை பயனளிக்காது நேற்றுச்சாவு

சாவகச்சேரி ஏப். 4

சாவு வீட்டுக்குச் செல்வதற்கு சாலையோரத்தில் நின்று சாலையின் மறுபக்கத்துக்குச் செல்ல முற்பட்டவேளையில் உந்துருளியினால் மோதுண்டு காயமடைந்த 70 வயது மூதாட்டி சிகிச்சை பயனளிக்காது நேற்று சாவடைந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை உறவினரின் சாவு வீட்டுக்குச் செல்வதற்காக நாவற்குளி மகா வித்தியாலயத்துக்கு அண்மையில் உள்ள சாலையோரத்தில் பேருந்தின் வருகைக்காக பல பெண்கள் காத்திருந்தனர்.

பேருந்து வருவதைக் கண்ட மூதாட்டி சாலையின் மறுபக்கம் பார்க்காமல் சாலையைக் கடந்த வேளையில் அவ்வழியே வந்த வித்தியாலய ஆசிரியையின் உந்துருளி மோதி வீழ்ந்ததில் மூதாட்டியும் ஆசிரியையும் காயமடைந்தனர்.

தலையில் காயமடைந்த நிலையில் அங்கிருந்து வாகனம் மூலம் யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை யளிக்கப்பட்டது.

நேற்றுக் காலை சிகிச்சை பயனின்றி அவர் சாவடைந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மூதாட்டியின் சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸார்.சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் யாழ்.பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மூலம் சாவு விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சம்பவம் நடந்த தினத்தன்று உந்துருளியைச் செலுத்திச் சென்ற ஆசிரியையைக் கைது செய்த பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியபோது ஆசிரியையை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (க-9)

### புலிகள் புதைத்தனர் என நம்பப்படும்

# நகையை தோண்டும் நடவடிக்கை தோல்வி

முல்லைத்தீவு, ஏப்.4

ஒட்டுசுட்டான் முத்துஐயன் கட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளால் வெடிபொருள்கள் அல்லது தங்கம் புதைத்துவைக்கப்பட்டதாக நம்பப்படும் நிலப் பகுதி ஒன்றில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தோண்டும் நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.




ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட முத்துஐயன் கட்டு இடது கரை சந்திப்பகுதியில் அமைந்துள்ள கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமான காணிப்பகுதியில், பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரின் தகவலுக்கு அமைவாக விடுதலைப்புலிகளால் வெடிபொருள்கள் அல்லது தங்கம் புதைத்து வைத்துள்ளதாக நம்பப்படும் இடத்தில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதிக்கு அமைய பிற்பகல் 1.30 மணிதொடக்கம் சுமார் மூன்று மணிநேரம் கனரக இயந்திரம் கொண்டு நிலப்பகுதியை ஆழப்படுத்தி தோண்டியும் எதுவித பொருள்களும் கிடைக்காத நிலையில் தோண்டும் நடவடிக்கை நிறைவுக்கு வந்துள்ளது. அண்மைக்காலமாக விடுதலைப்புலிக ளின், சொத்துகள், ஆயுதங்கள், ஆவணங்கள் என்பவற்றை தோண்டி எடுக்கும் நடவடிக்கை தோல்வியில் முடிவதைஅவதானிக்கமுடிகிறது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்,பொலிஸார் படையினர், தொல்பொருள்திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். (க-ரி3)

# குழியில் அடையாளப்படுத்திய என்புக்கூடுகள் அகற்றப்பட்டன

மன்னார், ஏப். 4



மன்னார் மனித புதைகுழியில் மேலதிகமாக அடையாளப்படுத்தப்பட்டு அப்புறப்படுத்தப்படாமல் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகள் அனைத்தும் நேற்று மாலை திடீர் என்று முழுமையாக அப்புறப்படுத்தப் பட்டுள்ளன.

கடந்த மாதம் 23 திகதி மன்னார் நீதிவான் நீதி மன்றத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர் மன்னார் மனித புதை குழி அகழ்வுப் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. களனிப் பல்கலைக்கழக பேராசிரியர் ராஜ் சோமதேவவின் அறிக்கையை மூன்று மாதங்கள் காலப்பகுதியில் சமர்ப்பிக்கும் படி கோரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அடையாளப்படுத்தப்பட்ட அனைத்து மனித எலும்புக்கூடுகளும் புதை குழியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மனிதப் புதை குழி சிறிய அளவில் அகலப்படுத்தப்பட்டு பொலித்தீன் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மூன்று மாத காலப்பகுதிக்குள் மூடப்படவுள்ளது.

சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ஸ, பேராசிரியர் ராஜ் சோம தேவ உள்ளிட்ட குழுவினர் நேற்றுப் பணியில் ஈடுபட்டிருந்தனர். (து-56)

# துரித கிராமிய அபிவிருத்தி தொடர்பான ஒன்றுகூடல்

முல்லைத்தீவு,ஏப் 4

புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிஸ்காந்தராசா சாந்தியின் துரித கிராமிய அபிவிருத்தி தொடர்பான ஒன்றுகூடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தலைமையில் கிராம மட்ட அமைப்பின் பிரதிநிதிகளுடன் மக்களது தேவைகளை இனம்கண்டு என்னால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம அபிவிருத்திக்காக 28 வேலைத்திட்டங்களுக்கு 20.9 மில்லியன் நிதியை ஒதுக்கி தந்தமைக்கு பிரதேச செயலர் நன்றி தெரிவித்தார்.

மேலும் சிறப்பு நிதியாக விவசாயம் சார்ந்த வேலைத் திட்டங்களுக்கும் குளசீரமைப்புக்கான வேலைகள் தொடர்பாகவும் சபையில் எடுத்துக்கூறப்பட்டது. (க-222)



### விழிப்புணர்வு ஒத்திகை

முல்லைத்தீவு.ஏப்.4

மல்லாவி நகர பகுதியில் விபத்துக்கான விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்வு இன்று காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை இடம்பெறவுள்ளது.

பாரியளவிலான விபத்தின்போது மருத்துவமனை முன்னாயத்தம், மற்றும் அதன் பதிலுறுத்தல் செயற்பாடு தொடர்பான முன்னெச்சரிக்கை தொடர்பான ஒத்திகை நிகழ்வாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கு அமைய இடம்பெறவுள்ளது. ஆதார மருத்துவமனை மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வழிகாட்டல் , ஆலோசனைக்கு அமைய ஆதார மருத்துவமனை மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பலகு, அனைத்து பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றது.

இது ஒரு ஒத்திகை செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத்தேவையில்லை என மாவட்ட செயலர் தெரிவித்தார். (க)

### ஹெரோய்ன் பொதிகள் வைத்திருந்தனரென மூவர் கைது

ஹெரோய்ன் போதைப் பொதிகளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் - பலோகம பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடத்திய சுற்றிவளைப்பில் கைது இடம் பெற்றது.

20 வயதுடைய நபரிடமிருந்து 2கிராம் 30 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது. 21 மற்றும் 25 வயதுகளையுடையவரிடமிருந்து தலா 3கிராம் 20மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டது. (து-71)

### ஆன்மிக சுற்றுலா

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அக்கராயன்குளம் கிராம முதியோர் சங்கத்தைச் சேர்ந்த 50 முதியவர்கள் நாளை திருகோணமலை மாவட்டத்துக்கு ஆன்மீகச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் வழிநடத்தலில் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஒழுங்கமைப்பில் அழைத்துச் செல்லப்படும் முதியோர்கள்.

திருக்கோணேச்சரம், திருகோண மலை சிறிலட்சுமி நாராயணர் கோயில் கன்னியா வெந்நீரூற்று ஆகிய திருத்தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (க-9)

# நாட்டில் இந்து மதத்துக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல், அழிவை அரசு நீக்கவேண்டும்

## கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நாடாளுமன்றில் கோரிக்கை

கொழும்பு, ஏப். 4
வடக்கு மாகாணத்தில் மட்டுமன்றி நாடு முழுவதும் உள்ள இந்துக் கோவில்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலை, அச்சுறுத்தல்கள், இந்துமத அழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக நீடித்துக்கொண்டிருக்கின்றன. கூட்டாட்சியில் நல்லது நடக்கும் என்று எண்ணிய இந்துக்கள் முன்னைய ஆட்சி போன்றுதான் தற்போதும் உள்ளது என்று வருந்துகின்றனர். இவற்றுக்கெல்லாம் அரசு காலந்தாழ்த்தாது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நாடாளுமன்றில் தெரிவித்தார்.
நாடாளுமன்றில் இந்து கலாசார அமைச்சு உள்ளிட்ட அமைச்சு மீதான பாதீட்டு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே சரவணபவன் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் கடலோரம் அமைந்த தங்குமிடவிடுதி இந்து சமயத்தவரின் தர்மச் சொத்து. 106 ஏக்கருடைய அந்த இடத்தில் 'சுக்கிரவார திருகோண சத்திரம்' என்ற சத்திரம் இருந்தது. இந்து சமயத்தவர்களுக்குரிய இந்த இடத்தை இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். இந்த இடங்களை தனியார் சிலருக்கு வழங்குவதற்கான சதிகள் நடந்தேறிக்கொண்டிருக்கின்றன.

**தலதா மாளிகைக்குச் சமம்**
பௌத்தர்களுக்கு தலதா மாளிகை எந்தளவுக்கு மிகமுக்கியமானதோ எந்தளவுக்கு புனிதமான இடமோ அந்தளவுக்கு யாழ்ப்பாணம் கீரிமலை இந்துக்களுக்கு முக்கியமானது புனிதமானது. அங்கு அமைக்கப்பட்டுள்ள அரசதலைவர் மாளிகையை சுற்றுலாத் தளமாக மாற்றும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அது கீரிமலையின் புனிதத் தன்மையைக் கெடுத்துவிடும்.
கீரிமலையில் மிகமுக்கியமான கிருஸ்ணர் கோவில் உட்பட 3 கோவில்கள் இராணுவத்தினரின் பிடிக்குள்தான் உள்ளன. 24 வருடங்களாக வழிபாடுகள் செய்யமுடியாதவாறு இராணுவத்தினர் தடை போட்டுள்ளனர்.
பளை, இயக்கச்சியில் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் இராணுவத்தினர் முகாம்கள் அமைத்துள்ளனர். ஏ9 வீதியோரம் உள்ள இந்து நிறுவனத்துக்குரிய காணியைக் கூட இராணுவத்தினர் இன்னும் விடுவிக்கவில்லை.

**மது நிலையங்கள் மூடப்படவேண்டும்**
வெசாக் போன்ற நாள்களில் வடக்கில் மதுபான விற்பனை நிலையங்கள் பூட்டப்படுவதுபோன்று, இந்துப் பெருநாள்களான தைப்பொங்கள், சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற நாள்களிலும் பூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.
நாட்டில் பௌத்த பல்கலைக்கழகம் போன்று பல்கலைக்கழகங்களில் இந்து பீடங்கள் உருவாக்கப்படவேண்டும். இந்து சமய ஆராய்ச்சிகள் இடம்பெற வழிவகைகள் உருவாக்கப்படவேண்டும்.

**யாத்திரை**
பௌத்தர்கள் புத்தகாயா செல்வது போன்று, இஸ்லாமியர்கள் மக்கா செல்வதுபோன்று, இந்துக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவிலுள்ள சிதம்பரம், காசி உட்பட புனித தலங்களுக்கு யாத்திரை சென்றுவர ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

**இழப்பீடு போதாது**
யாழ்ப்பாணத்தில் போர்க் காலத்தில் அழிந்த, பாதிக்கப்பட்ட கோவில்களுக்கு முன்னைய அரசுகள் போதிய இழப்பீடுகள் வழங்கியிருக்கவில்லை. 2 லட்சம் ரூபாவுக்கு மேல் இழப்பீடு வழங்கப்படவில்லை என்று கோவில் நிர்வாகத்தினர் முறையிடுகின்றனர். இழப்பீடு உரிய தொகையில் வழங்கப்படவேண்டும்.

**தொல்பொருள் திணைக்களம்**
முல்லைத்தீவில் செம்மலைப் பிள்ளையார் கோவில் விவகாரம், நீராவியடிப் பிள்ளையார் கோவில் விவகாரங்களில் பிக்குமார், மோசமாக நடந்துகொள்கின்றனர். அவர்களுக்கு தொல்பொருள் திணைக்களத்தினர் வேண்டத்தக்க உதவி, ஒத்தாசை செய்து இந்துக் கோவில்களின் வளர்ச்சியை முடக்குவதில் குறியாக உள்ளனர். இந்துக் கோவில்களை அடக்கி ஆள்வதில் பிக்குகளும் தொல்பொருள் திணை க்களத்தினரும் மிகத்தீவிர மாகச் செயற்படுகின்றனர்.

**குருட்டு அரசா?**
கோவில் எல்லைக்குள் புத்தர் சிலைகளை வைக்கின்றனர். விகாரைகளைக் கட்டுகின்றனர். அதற்காக இந்துக் கோவில்களின் வழிபாடுகளைக்கூட முடக்குகின்றனர். இந்துக் கோவில்கள் உள்ள இடங்கள் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமானவை என்று சாக்குப்போக்குச் சொல்லி பாரம்பரியமாக வழிபாடு நடைபெற்ற கோவில்களை அகற்றுமாறு புதுக்கதை விடுகின்றனர். பொலிஸாரும் பெரும்பான்மையினத்தவர்களுக்குச் சார்பாகவே செயற்பட்டுள்ளனர். இப்படியெல்லாம் அட்டூழியம் செய்வது இந்து மதம் மீதான திணிப்பாக இந்த அரசுக்குத் தெரியவில்லையா? ஏன் அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றது? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?
திருகோணமலை திருக்கோணேச்சரத்தில் தங்குமிட விடுதி இல்லை. மலைக்குச் செல்ல பாதை சீரில்லை. கிண்ணியா வெந்நீரூற்று பற்றி சைவம் பற்றிய வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அங்கு பிள்ளையார் சிலை இருந்தது. அதை உடைத்து பிக்கு கையகப்படுத்தியுள்ளார். அந்த இடத்தை மீள இந்துக்களிடம கையளிக்க நடவடிக்கை வேண்டும். அங்கு இந்துக்களுக்கான மடம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. அது மீள அமைக்கப்படவேண்டும்.

**வெள்ளவத்தையில் மடம்**
கொழும்பில் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெகிவளை உட்பட பல இடங்களில் இந்துக்கள் செறிந்து வாழ்கின்றனர். அதனால், வெள்ளவத்தைக் கடற்கரையில் இந்துசமய அந்திமக் கிரியைகள் இடம்பெறும் வகையில் மடம் அமைக்கவேண்டும்.

**புலமைப் பரிசில்**
இந்து சமய ஆராய்ச்சிகள், இந்து தத்துவவியலை ஆராய்ச்சி செய்யும் நோக்கில் இந்திய பல்கலைக்கழகங்களுக்குச் சென்று அவற்றைத் தொடரவோ புலமைப் பரிசில் திட்டம் எதுவுமே இந்துக்களுக்கு இல்லையே! இனிமேலாவது புலமைப்பரிசில் திட்டங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

**உதவும் நடைமுறை விரிவடையவேண்டும்**
கோவில்கள் சமயப் பணிகளை விரிவாக்க, சமூகப் பணிகளை மேலும் சிறப்பாகச் செய்விக்க அவர்களுக்கு ஏற்ற ஆலோசனைகள். உதவிகள் வழங்கப்படவேண்டும். வறுமையிலுள்ளவர்களைத் தூக்கி வழிகாட்டி விடக் கூடியதாகவும் ஒவ்வொரு கோவில்களும் மாறவேண்டும். அதற்கேற்ற நடைமுறைகளை அறிமுகப்படுத்துவது சிறப்பாக இருக்கும்.
இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு, அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பரிந்துரைகளைச் செயற்படுத்த முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (த)

## உணவக உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தமர்வு

மன்னார்,ஏப்.4
மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுவில் உணவுப் பொருள்களைச் கையாளும் உணவகங்களின் உரிமையாளர்களுக்கு விழிர்ப்புணர்வு கருத்தமர்வு நேற்று நடைபெற்றது.



உணவுப் பாதுகாப்பு வாரத்தையொட்டி மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவுப் பொருள்களை கையாளும் உணவகங்கள், வெதுப்பகங்களின் உரிமையாளர்களுக்கு உணவுப்பொருள்களைக் கையாளும் விதம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த கருத்தமர்வு மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் மன்னார் சுகாதார மருத்து அதிகாரி வி.ஆர்.சி.லெம்பேட் தலைமையில் இடம் பெற்றது.
இதன் போது பொது சுகாதாரப் பரிசோதகர்கள்,மேற்பார்வை சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.
உணவுகப் பொருள்களைக் கையாளும் உணவகங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய சுகாதார நடவடிக்கைகள், கடமையாற்றுபவர்களின் சுகாதாரம் மற்றும் உணவுப் பொருள்களை வைக்கும் முறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.
ஒருசில தினங்களில் உணவு கையாளும் நிலையங்களுக்குத் திடீர் பயணத்தை மேற்கொள்ளவுள்ள மன்னார் பொது சுகாதார பரிசோதகர்கள் தமது அவதானங்களை மேற்கொள்ளவுள்ளதோடு, ஆலோசனைகளையும் வழங்கவுள்ளனர்.
சட்ட திட்டங்களுக்கு அமைய இயங்காத உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-56)

## கூட்டணி தொடர்பில் 10இல் முக்கிய பேச்சு

கொழும்பு, ஏப். 4
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடனான கூட்டணி தொடர்பில் இந்தமாதம் 10 ஆம் திகதி தீர்க்கமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. அந்த கலந்துரையாடலின் பின்னரே அரசதலைவர் வேட்பாளர் உள்ளிட்ட பல பிரச்சினை களுக்கும் தீர்வு காணப்படும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.
சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
முன்னணியுடன் கூட்டணி அமைப்பதற்கு அப்பால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்ற ரீதியில் எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராகக் களமிறக்குவதே அனைவரதும் விருப்பம். சிறிசேன இது குறித்து தனது தீர்மானத்தை அறிவிக்கும் வரையில் நாம் எதையும் உறுதியாகக் கூறமுடியாது என்றார்.

**மேதினம் கம்பகாவில்**
மே தினக் கூட்டம் தொடர்பில் தெரிவித்த அவர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் கம்பஹா மாவட்டத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் எதிர்வரும் 5 ஆம் திகதியின் பின்னர் இடம்பெறும். நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் இதற்குக் குழு நியமிக்கப்பட்டுள்ளது -என்றார். (த-61)

## அரச விடுதியின் முகாமையாளரும் ஊழியரும் கைது

கொழும்பு, ஏப். 4
கதிர்காமத்தில் தொடருந்துத் திணைக்கள அலுவலர்களின் விடுதி முகாமையாளர் மற்றும் ஊழியர் ஆகியோரைக் கதிர்காமம் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.
சிறுவர்கள் இருவரை பாலியல் முறை கேட்டுக்கு உட்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அந்த விடுதியின் அறையொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு சிறுவர்களையும் பொலிஸார் மீட்டனர். பூட்டிய கதவை உடைத்தே சிறுவர்கள் மீட்கப்பட்டனர்.
மருத்துவமனையில் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். (த)

# வடக்கில் எந்தவொரு அபிவிருத்தியும் இல்லை

*நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குற்றச்சாட்டு*

கொழும்பு,ஏப்.4

வீதி அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுப்பதாக அரசு தொடர்ச்சியாக வாக்குறுதிகளை கொடுத்தும் இன்றுவரை அதற்கான எந்தவொரு வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை. இந்த அரசின் வாக்குறுதிகளை நம்பமுடியவில்லை எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்சி. சிறிதரன்தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு,மின்வலு, வலுசக்தி மற்றும் தொழில்துறைஅபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் மீதான விவாதத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண குடாநாட்டில் நெடுந்தீவு என்பது தனித்தீவு. கடல் பயணம் மட்டும்தான் ஒரே வழி. இக்கடல் பயணத்துக்காக தற்போது வடதாரகை என்ற படகு சேவையில் ஈடுபடுகின்றது. இது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானதாக இருந்தபோதும்,கடற்படைதான் இயக்குகிறது. அடுத்தபடகுநெடுந்தாரகை, இது வடக்கு மாகாண சபையின்உள்ளூராட்சிதிணைக்களத் துக்கு கீழ் உள்ளது. இது சிலவேளைகளில் ஓடும் ஓடாமலும் விடும் அத்துடன் பாதுகாப்புமற்றது.

நீண்ட காலமாக நெடுந்தீவுக்கான சேவையில் ஈடுபட்டுவந்த குமுதினிப்படகுக்கு நவீன இயந்திரத்தைப்பொருத்தி சீரமைப்பு செய்யுமாறு பல தடைவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும், அது கவனத்தில் எடுக்கப்படவில்லை. இதற்குபொறுப்பான அமைச்சராக கபிர் ஹாசிம் உள்ளார்.இந்த குமுதினிப்படகு வரலாற்று சிறப்புபெற்றது. இதற்கு 35 மில்லியன் ரூபாவை செலவிட்டால் சிறப்பான சேவையில் ஈடுபடுத்த முடியும் . எனவே அமைச்சர் இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் வடக்கில் ஐ ரோட் திட்டம் இன்றுஆரம்பமாகும், நாளை ஆரம்பமாகுமென கடந்த 3 வருடங்களாகக் கூறப்படுகின்றது. நாங்களும் இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஏறி இறங்காத நாளில்லை. கடந்த வாரம் நான் அமைச்சர் கபிர்ஹாசிமை சந்தித்த போதுஎதிர்வரும்ஜூன்மாதம் ஆரம்பமாகும் என்றார். அதனையும் நம்பமுடியாதுள்ளது. இதேவேளையாழ்ப்பாணத்தில் உள்ள ஊர்காவற்றுறை, காரைநகரை இணைக்கும் பாலம், முல்லைத்தீவிலுள்ளவட்டுவாகல் பாலம்ஆகியவற்றை சீரமைக்கவேண்டுமெனபலதடவைகள் கோரிக்கை விடுத்தும் இன்று வரை அவற்றில் கை வைக்கப்படவில்லை.

வடக்கில் பல வீதி களின்அபிவிருத்திகளுக்கென நிதிகள் ஒதுக்கப்படுவதாக வரவு-செலவுத்திட்டங்களிலும் கூறப்படுகின்றன . அமைச்சர்களும்கூறுகின்றனர். ஆனால் பலவருடங்கள் கழிந்தும் எந்த வீதியும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. அண்மையில் ஏற்பட்டவெள்ளத்தால் சேதமடைந்த கிளிநொச்சி வீதிகளின் விவரங்களை அமைச்சர் கபிர்ஹாசிமிடம் கொடுத்தேன். ஒரு வீதிக்கு 2 மில்லியன் ரூபா வீதம் நான் கொடுத்த 40 வீதிகளுக்கும் நிதி ஒதுக்குவதாக உறுதியளித்தார். இன்று வறட்சியும் வந்துவிட்டது. ஆனால் வீதிக்கான நிதிதான் வரவில்லை - என்றார். (க-31)

# தேசிய பாடசாலைகளாக்குவது அதிபர்களின்றி தவிக்க விடவா?

*மாகாண முன்னாள் உறுப்பினர் கேட்கிறார்*

*யாழ்ப்பாணம், ஏப். 4*

*நாட்டிலுள்ள 87 தேசிய பாடசாலைகளில் பெரும்பாலான தேசிய பாடசாலைகளில் நிரந்தர அதிபர் இல்லை. இந்தநிலையில், வடக்கில் 14 பாடசாலைகளையும் தேசியப் பாடசாலைகளாக்கி அதிபர்கள் இன்றி இயங்க வைக்கப்போகின்றீர்களா? இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆர்.ஜெயசேகரன்.*

அவர் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் பாடசாலையில் கடந்த ஒரு வருடமாக பிரதி அதிபர் ஒருவர், உபஅதிபர் ஒருவர் இன்றி இயங்கி வந்தது. அண்மையில் அதன் அதிபர் ஓய்வு பெற்று சென்றுள்ளார். ஆனால் அந்தப் பாடசாலையின் அபிவிருத்திச் சமூகமும் பழைய மாணவர் சங்கமும் அதிபர் நியமனம் தொடர்பில் மூன்று பேரின் பெயர்களைப் பரிந்துரை செய்து கல்வி அமைச்சருக்குக் கடிதம் எழுதியது.

தற்போது தற்காலிகமாக ஓர் உபஅதிபர் பதில் கடமையாற்ற நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தேசிய பாடசாலை ஆக்கினால் நீச்சல் தடாகம் உள்ளிட்ட வளங்கள் வரும் எனக் கதை சொல்லப்படுகின்றது. வடக்கு மாகாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகளில் மத்திய கல்லூரியில் மாத்திரமே நீச்சல் தடாகம் உள்ளது.

அதுவும் அமைக்கப்பட்ட சில நாள்களில் மாணவர்கள் பயன்படுத்தமுடியாத நிலையில் இன்றுவரை இருக்கின்றது. ஏனையவற்றில் அதுவும் இல்லை. இதை அமைப்பதற்கு இதுவரை மத்திய அரசு முயன்றதாகத் தெரியவில்லை .

ஏமாற்றுக் கதைகளைக் கூறி மாகாணத்தின் பாடசாலைகளை மாகாண சபையின் அதிகாரத்தை மத்திக்குத் தாரைவார்க்க வேண்டாம் என்று கோருகின்றேன். தேசிய பாடசாலை என்ற பெயருக்காகப் பெற்றோர்கள், பாடசாலைச் சமூகம் மற்றும் தரப்பினர் மாகாண அதிகாரத்தை மத்திக்கு கையளிக்குமாறு கோரிக்கை விடுக்க வேண்டாம் என்று விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாகாணப் பாடசாலைக்கும் தேசியப் பாடசாலைக்கும் ஆசிரியர்கள், பாடத்திட்டங்கள், பரீட்சைகள் எல்லாம் பொதுவானவை. இவ்வாறான நிலையில் எதற்காகத் தேசியப் பாடசாலையாக்க முற்படுகிறீர்கள்?

தமிழ் மக்கள் அதிகாரத்துக்காகப் போராடி வரும் சமூகம். தற்போது நில ஆக்கிரமிப்புக்கள், குடியேற்றங்கள், வெளிமாவட்டத்தவர்களை வேலைக்கு அமர்த்துதல் மற்றும் குடிப்பரம்பலை மாற்றுவதற்கான வேலைகள் தமிழர் பகுதிகளில் இடம்பெறுகின்றன.

இந்தநிலையில், மாகாண அதிகாரத்தை மத்திக்குப் பெற்றுக் கொடுத்து தேசியப் பாடசாலையாக மாற்ற எம்மவர்கள் துணைபோக வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ் மக்கள் நீண்டகாலமாக அகிம்சை மற்றும் ஆயுத ரீதியான போராட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அற்ப, சொற்ப அதிகாரத்தைக்கூட நாம் இழப்பதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்றுள்ளது. (கு)

## தலைமை நீதிபதி கடமையேற்றார்

மேன் முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிபதியாக நியமிக்கப் பட்ட மூத்த மேலதிக சொலிசிட்டர் அரசதலைவர் சட்டத்தரணி ஜெனரல் யசந்த கோதாகொட, அண்மையில் அரசதலைவர் முன்னிலையில் சத்தியப்பிர மாணம் எடுத்தார்.

அவர் இதுவரை சட்ட மா அதிபர் திணைக்களத்தின் குற்றவியல் விவகாரங்களைக் கையாளும் பிரிவின் பிரதித் தலைவராக கடமையாற்றினார். (கு-71)

# மனித உரிமைகள் சபை தீர்மானத்தில் தலையிடுக

*பூகோள இலங்கையர் ஒன்றியம் கோரிக்கை*

கொழும்பு,ஏப்.4

மனித உரிமைகள் சபையின் 40 (1) தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியுள்ள நிலையில் இந்த விடயம் குறித்து அரச தலைவர் தலையீடு செய்ய வேண்டும்.

அரச தலைவரின் அனுமதியின்றியே ஜெனீவாவில் வெளி விவகார அமைச்சு இணைஅனுசரணைவழங்கியது.

எனவே இந்தச் செயற்பாடு நீதியான முறையில் இடம்பெறவில்லைஎன்பதைஅரச தலைவர் தெளிவுபடுத்த வேண்டும் என்பதுடன், அதன் காரணமாக தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியமை வலுவிழக்கின்றது என்பதையும் அவர் எடுத்துக்கூற வேண்டும்.

தற்போது இந்த விடயத்தில் நிறைவேற்றதிகாரமுடைய அரசதலைவரால் மாத்திரமே தலையீடு செய்ய முடியும் என்பதாலேயே, இவ்வாறு குறிப்பிடுகின்றோம் என பூகோள இலங்கையர் ஒன்றியத்தின் தலைவர் சியாமேந்திர விக்கிரமாராச்சி தெரிவித்தார்.

இராணுவத்தினரை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையில் ஜெனீவா சென்று திரும்பிய சியாமேந்திர, தமது அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விளக்குகையிலேயே இவ்வாறு கூறினார். அவர் மேலும் குறிப்பிடு கையில்

நாட்டுக்கு எதிரான தீர்மானமொன்றுக்கு இணை அனுசரணை வழங்கி, அதனை ஏற்றுக்கொண்ட நாடாக எமது நாடு மாத்திரமே இருக்கின்றது. கடந்த 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30 (1) தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத்தொடர்ந்து, அதில் குறிப்பி டப்பட்டிருந்தவற்றில் கணிசமான அளவு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் இந்த முறையும் மேலும் இரு வருடங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

உண்மையிலேயே இது இலங்கை என்ற முழு நாடு மற்றும் அதன் சுயாதீனத்துவம் தொடர்பிலான பிரச்சினையாகும். ஆனால் அரசியல்வாதிகளும், அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுமே இதனை தமிழ் மற்றும் சிங்கள இனங்களுக்கிடையிலான பிரச்சினை போன்று சித்தரிக்கின்றார்கள்.

அதேபோன்று நாட்டின் அரசியல்வாதிகளுக்கு ஜெனீவா விவகாரம் குறித்து போதிய விளக்கமின்மையும்இதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது. ஏனெனில் இஸ்ரேல் தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் எத்தனையோ தீர்மானங் கள் கொண்டுவரப்பட்டன. ஆனால் இஸ்ரேல் அதனைக் கருத்திற்கொள்ளவில்லை.

எனினும் தற்போது அரசு மீண்டும் மனித உரிமைகள் சபையின் 40 (1) தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியுள்ள நிலையில் இந்த விடயம் குறித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலையீடு செய்ய வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ளது.

அரசதலைவரின் அனுமதியின்றியே ஜெனீவாவில் வெளி விவகார அமைச்சு இணை அனுசரணை வழங்கியது.

இந்தச் செயற்பாடு நீதியான முறையில் இடம்பெறவில்லை என்பதை அரச தலைவர் தெளிவுபடுத்த வேண்டும் என்பதுடன், அதன் காரணமாக தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியமை வலுவிழக்கின்றது என்பதையும் அரசதலைவர் எடுத்துக்கூற வேண்டும். தற்போது இந்த விடயத்தில் நிறைவேற்றதிகாரமுடைய அரசதலைவரால் மாத்திரமே தலையீடு செய்ய முடியும் என்பதாலேயே இவ்வாறு குறிப்பிடுகின்றோம் - என்றார். (க)

# கோத்தபாய அடித்து வெளியேற்றினார் தேவையறிந்து நாங்கள் உதவுகிறோம்

*ஐ.தே.கவின் ரஹ்மான் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு,ஏப்.4

கொழும்பை அபிவிருத்தி செய்வதாகத் தெரிவித்து கோத்தபாய ராஜபக்ச மக்களின் காணிகளை பல்தேசிய கம்பனிகளுக்கு விற்று மக்களை கொழும்பில் இருந்து வெளியேற்றினார். ஆனால் தற்போதைய அரசு மக்களின் தேவைகளை உணர்ந்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்த வியாழக்கிழமை பாதீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசில் கோத்தபாய ராஜபக்சவே கொழும்பை அபிவிருத்தி செய்தார் என்று சிலர் தெரிவிக்கின்றனர். கோத்தபாய கொழும்பை அபிவிருத்தி செய்யவில்லை. மாறாக கொழும்பு மக்களை கொழும்புக்கு வெளியில் குடியேற்றி, அவர்களின் காணிகளை பெற்றுக்கொண்டு பல்தேசிய கம்பனிகளுக்கு விற்றுவிட்டார். அந்த மக்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்கு ஒப்பந்தம் செய்த கம்பனி இன்னும் வீடுகளைக் கட்டிக்கொடுக்கவில்லை.

கொம்பனித்தெரு மக்களின் வீடுகளை உடைத்து அவர்களை வேறு இடங்களில் வீடு கட்டித்தருவதாக தெரிவித்து அவர்களை பலாத்காரமாக வெளியேற்றி பல கோடி ரூபா பெறுமதியான காணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் 6 வருடங்களாகியும் அந்த மக்களில் அதிகமானவர்களுக்கு வீடும் இல்லை பணமும் கிடைக்கவில்லை. நாங்கள் கொழும்புவாழ் வருமானம் குறைந்த மக்களுக்கு வீட்டுத் தேவைகளை நிறைவேற்றி வருகின்றோம். அவர்களுக்கு தேவையான வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து வருகின்றோம்.

கொழும்பு ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டை என்பதால்தான் 1994க்கு பிறகு அபிவிருத்திஎதுவும்இடம்பெறவில்லை -என்றார். (கு-31)

# நிர்வாக சேவைத் தரம் III அலுவலர்கள் இனிமேல் உள்ளூராட்சிச் செயலராகலாம்

யாழ்ப்பாணம், ஏப். 4

**வடக்கு மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகள் உட்பட நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகளின் செயலர் பதவிகளுக்கு இலங்கை நிர்வாக சேவையின் தரம் III பதவி ஆளணி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.**

மாகாணசபைகள்உள்ளூராட்சிஅமைச்சு முன்வைத்த அமைச்சரவைப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவற்றின் விவரங்களை கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்குக் கொண்டு வரும் வகையில் நாடுமுழுவதும் சகல மாகாண, உள்ளூராட்சி அமைச்சுக்களுக்கும் சகல தலைமைச் செயலர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

பிரதேசசெயலகங்களுக்குநிகரொத்ததாக நாடு முழுவதும் உள்ளூராட்சி சபைகளின் (நகரசபை, பிரதேச சபை, மாநகரசபை) செயலர் தரம் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஆக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இதுவரைகாலமும் இருந்துவந்த சுப்றா தரம் நீக்கப்பட்டு இனி வரும் காலங்களில் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த அலுவலர்களே (தரம்III) சபைகளின் செயலர்களாக நியமனமாவர் என்று கூறப்பட்டது. (து-50)

# போதை ஒழிப்பு உறுதிமொழி நாடுமுழுவதும் நடைபெற்றது

கொழும்பு, ஏப் 4

போதையிலிருந்து விடுதலை பெற்ற நாட்டுக்காக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து உறுதிமொழியளிக்கும் "சித்திரை மாத உறுதிமொழி" அளிக்கும் நிகழ்வு நேற்று நாடளாவிய ரீதியில் இடம்பெற்றது.

தமிழ் மொழியில் உறுதி மொழியளிக்கும் நிகழ்வு காலை 8.32 தொடக்கம் 08.34 வரை இடம்பெற்றது. சிங்கள மொழியில் காலை 8.30 தொடக்கம் 8.32 வரையும் இடம்பெற்றது.

போதையற்ற நாட்டினை உருவாக்குவதற்கு அரச தலைவர் பல்வேறு முயற்சிகளை எடுத்து வரும் நிலையில், சித்திரை புதுவருட உறுதி மொழியாக அரச அலுவலகங்கங்களில் இதனைக் கடைபிடிக்க வேண்டும் என்று அரச தலைவர் செயலகம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டின் பலபகுதிகளிலும் உறுதிமொழியளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.



மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்



மாவட்டச் செயலகம் முல்லைத்தீவு



போக்கட்டி அ.த.க பாடசாலை

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில் அலுவலர்களால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு போதைக்கு எதிராக உறுதிமொழி எடுத்தனர்.

யாழ்ப்பாணம் போக்கட்டி அ.த.க பாடசாலையிலும் போதையிலிருந்து விடுதலை பெற்ற நாடொன்றுக்கான உறுதிமொழி எடுக்கப்பட்டது. நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்ட எழுதுமட்டுவாழ் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சூ.குணசாந்தனும், அதிபர் தி. அபராஜிதனும் கருத்துக்களை வழங்கினர்.

சாவகச்சேரி நகரசபையில் நிகழ்வு இடம்பெற்றது. பிரதேச சபைச் செயலர் ஜீ.சபேசன் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

நிர்வாக அலுவலர் திருமதி செ.அனுஷியா உறுதிஉரையை வாசித்தார்.

வவுனியா மாவட்ட செயலக முன்றலில் மாவட்ட மேலதிக செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மாவட்ட செயல அலுவலர்களினால் போதையிலிருந்து விடுதலை பெற்ற நாடு எனும் தொனிப்பொருளில் உறுதி மொழி அளிக்கப்பட்டது.

வவுனியா திருஞான சம்பந்தர் வித்தியாலயத்திலும் மாணவர்கள் போதைக்கு எதிராக உறுதிமொழி எடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும் போதைப் பொருளுக்கு எதிரான சித்திரை உறுதிமொழி எடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டச் செயலகத்திலும் சர்வமத பிரார்த்தனைகளைத் தொடர்ந்து உறுதி மொழி நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் எஸ். குணபாலன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

வன்னிப்பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலக வளாகத்திலும் போதைப் பொருள் ஒழிப்புத்திட்ட உறுதிமொழி எடுக்கப்பட்டது.

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அகுரா அபேயவிக்கிரம தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொலிஸார் கலந்துகொண்டனர்.

இதேவேளை ஹற்றன்பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை இ.கி.மி வித்தியால்யத்தில் அதிபர் தலைமையில் மாணவர் ஒன்றிணைந்து போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்க ஒன்றினைவோம் என்று உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்

மூதூர் பிரதேச செயலகத்தால் பிரதேச செயலக முன்றலில் செயலர் எம்.முபாரக் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் போதைப்பொருள் பாவனைக்கெதிராக உறுதிமொழியினை அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் எடுத்துக் கொண்டனர்.

(ஐ-7,40,222,110,159,9,213,56)

# தனியாரிடம் மின் பெற்று பணத் திருட்டுக்கு முயற்சி

## அரசைச் சாடுகிறது தேசிய புத்திஜீவிகள் அமைப்பு

கொழும்பு, ஏப். 4

நாட்டில் மின்சார நெருக்கடி நிலையை உருவாக்கி, அதற்கான கேள்வியைத் தோற்றுவித்து, தனியாரிடமிருந்து அதிக விலைக்கு மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய முடியும். அதன் மூலமாக தமது சட்டைப் பைகளை நிரப்பிக்கொள்ளவே அரசு தந்திரோபாயமாகச் செயற்படுகிறது.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது. தேசிய புத்திஜீவிகள் அமைப்பு பத்தரமுல்லையில் உள்ள அவகாஷ நிலையத்தில் அந்த அமைப்பு நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அமைப்பைச்சேர்ந்தவரும் சிறிஜய வர்த்தனபுர பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளருமான அனில் ஜயந்த பெர்னாந்து மேலும் தெரிவித்ததாவது:

மின்சாரம் மக்களின் அத்தியாவசியத் தேவை. மின்வழங்கல்தொடர்பில்இலங்கை மின்சாரசபை தயாரிக்கின்ற நீண்டகால செயற்பாட்டுத் திட்டத்தின்படி மின்நெருக்கடிக்கு மாற்றுத்தீர்வு குறித்து ஏன் ஆராயப்படவில்லை?

மக்கள் அடுத்த வாரம் தமிழ், சிங்களப் புத்தாண்டைக் கொண்டாடவுள்ள நிலையில் மின்வெட்டு பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிக்கும். இதனை அரசு திட்டமிட்டு மேற்கொண்ட சதி என்றே கூறவேண்டும். தனியார்துறை இலாபமீட்ட மக்களின் நிதியைப் பயன்படுத்திக் கொள்ளும் செயற்பாடே இது - என்றார்.

(கு-61)

# கலைப் பிரிவு மாணவர்கள் சமூகவிஞ்ஞான பாடத்தை தெரிவு செய்ய வேண்டும்

க.பொ.த உயர்தரத்தில் கலைப் பிரிவை தெரிவு செய்யும் மாணவர்கள் பிரிவில் உள்ள சமூக விஞ்ஞான பாடம் ஒன்றை தெரிவு செய்வதன் மூலம் பல்கலைக் கழக நுழைவை உறுதி செய்ய முடியும். இவ்வாறு கலைப்பிரிவில் தொகுதிப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

க.பொ.த சாதாரண பரீட்சை முடிவுகள் தற்போது வெளியாகி உள்ளன. இந்நிலையில் உயர் தரத்துக்கான பாடத் தெரிவுகளை மாணவர்கள் அவர்களது பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுசெய்து வருகின்றனர்.

கணிதம், விஞ்ஞானம், கலை, தொழில்நுட்பம் போன்ற பாடத் துறைகள் உள்ளன. இவற்றில் கலைத் துறையைதெரிவு செய்யும் மாணவர்கள் மூன்று பாடத்தில் திறமைச் சித்தி பெற்றும் பல்கலைக்கழகத்துக்கான நுழைவு கிடைக்காமல் போன சந்தர்ப்பங்கள் கடந்த காலத்தில் இடம்பெற்றுள்ளன.

அதற்குப் பல்கலைக் கழக நுழைவுக்கு ஒவ்வொரு பாடத்துக்கும் வழங்கப்படும் வெட்டுப் புள்ளிகளே தீர்மானிக்கின்றன.

முதன்மைச் சித்தி பெறுவதற்காக இலகுவான பாடங்களை தெரிவு செய்வதன் மூலம் திறமைச் சித்தி பெற்றும் அது பலன் இல்லாமல் போகிறது.

கலைப் பிரிவைத் தெரிவு செய்யும் மாணவர்கள் கட்டாயம் ஒரு சமூக விஞ்ஞான பாடத்தை தெரிவு செய்வது அவசியம். சமூக விஞ்ஞான பாடத்துக்கு ஒப்பீட்டு அடிப்படையில் வெட்டுபுள்ளி அதிகமாக வழங்கப்பட்டு வருகிறது.

கலைத்துறையை தெரிவு செய்யும் மாணவர்கள் சமூக விஞ்ஞான பாடங்கள், அழகியல் பாடங்கள், மொழிப் பாடங்கள், சமயம் மற்றும் நாகரிக பாடங்கள் போன்ற 4 பிரிவில் உள்ளடங்கும் பாடங்கள் மூன்றை தெரிவு செய்ய வேண்டும்.

இந்தத் தெரிவில் ஏனைய இரண்டு பாடங்களைத் தவிர மூன்றாவது பாடமாக சமூக விஞ்ஞான பிரிவில் அடங்கும் அரசறிவியல், புவியியல் உள்ளிட்ட 11 பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும்.

இதனால் வெட்டுப் புள்ளிகள் சீர் செய்யப்பட்டு பல்கலைக் கழக நுழைவுக்கான அதிக சந்தர்ப்பம் உருவாகும் என்றனர். (ஐ-7)

# போதைப் பொருள்கள் விற்றால் கடுமையான சட்ட நடவடிக்கை

## அரசதலைவர் சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 4

போதைப்பொருளை நாட்டுக்குள் கொண்டு வருபவர்கள், விற்பனை செய்பவர்கள், போதைப்பொருளை வைத்திருப்பவர்கள் மற்றும் அதனை பாவிக்கும் நபர்களுக்கு எதிராக தீவிர சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

போதைப்பொருள் கட்டுப்பாடு மற்றும் குற்றங்களைக் கட்டுப்படுத்தல் பற்றிய சட்ட வரைவுகள் தொடர்பில் அரசதலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது. அதில் அரசதலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நச்சுத்தன்மையுடைய போதைப்பொருளைத் தம்வசம் வைத்திருப்பதனால் கைது செய்யப்படும் நபர்களுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது அவர்களிடம் காணப்பட்ட போதைப்பொருளின் அளவைக் கணக்கீடு செய்தல் உள்ளிட்ட இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் செயற்பாடுகளின் போதான வளங்களின் தட்டுப்பாடு போன்ற காரணங்களால் நடைமுறை ரீதியில் தாமதம் ஏற்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இது தொடர்பாக ஆய்வு நடத்தித் தாமதங்களைத் தவிர்த்து குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதைத் துரிதப்படுத்தும் வேலைத்திட்டமொன்றை சட்டமா அதிபர் திணைக்களம், இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றை ஒன்றிணைத்து நீதி அமைச்சின் தலைமையில் விரைவில் தயாரிக்குமாறும் நீதி அமைச்சர் தலதா அத்துகோரளவுக்கு பணித்தார்.

அனைத்து நிறுவனாங்களுடனும் கலந்துரையாடல் நடத்தி போதைக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்கான விரிவான ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துதல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

மதுவரி கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்தல் தொடர்பிலான முன்னேற்றம் குறித்தும் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது. உரிய திருத்தங்களை நிதி அமைச்சின் ஊடாக விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்குமாறும் அரசதலைவர் பணித்தார். (கு)

# பல்கலையில் பகிடிவதை மாணவன் உயிர்மாய்ப்பு

கொழும்பு, ஏப். 4

மொரட்டுவைப் பல்கலைக்கழக மாணவன் ஒருவர், பகிடிவதையைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக தியகம தொழில்நுட்பப் பிரிவில் முதலாம் ஆண்டில் கற்கும் மாணவர் ஒருவரே நேற்றுமுன்தினம் பிற்பகல் உயிரை மாய்த்துள்ளார்.

குருநாகல் - கும்புக்கெட்டே - சடுவாவ பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஷனில்க தில்ஷான் விஜேசிங்க என்ற மாணவனே உயிரை மாய்த்துள்ளார். இரண்டு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின் முதலாவது பிள்ளையான இவர், தியகம தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெறும் பகிடிவதை தொடர்பில், தனது இறப்புக்கு முன்னர் கடிதம் ஒன்றை எழுதி வைத்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த மாணவன், பகிடிவதைக்குள்ளானதன் பின்னர் ஏற்பட்ட உளவியல் தாக்கத்துக்கு குருநாகலிலுள்ள மனநல மருத்துவர் ஒருவரிடம் சிகிச்சை பெற்றுள்ளார் என்றும் கும்புக்கெட்டே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், உயிரிழந்த மாணவனின் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் அங்குள்ள மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

## மே 18 நினைவேந்தல் நிகழ்வு கூட்டம் ஜேர்மனில் ஆரம்பம்

### பல இடங்களிலும் தொடரும்



கொழும்பு, ஏப். 4

வலி சுமந்த முள்ளி வாய்க்கால் நாள்களை மனதில் நிறுத்தி பன்னாட்டு அரங்கில் தமிழின அழிப்புக்கு நீதி கோரிப் போராடும் முதலாவது மக்கள் சந்திப்பு, ஜேர்மன் தலைநகர் பேர்லினில் தொழிலாளி பொதுநல மக்கள் சந்திப்பு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

சந்திப்பில் கலந்துகொண்ட மக்கள் மத்தியில் எதிர்வரும் தமிழின அழிப்பு நாள் மே 18 பேரணியை வலுப்படுத்தும் முகமாக கருத்துக்களும் வேலைத்திட்டத்தை ஆய்வு செய்யும் முகமாக கருத்துக்களும் உரையாடலாக அமைந்திருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

சந்திப்பில் கலந்துகொண்ட இளையோர்கள் மற்றும் உயர்கல்வி மாணவர்கள் ஊடாகக் கிடைக்கப்பெற்ற கருத்துக்கள் அனைவராலும் வரவேற்கப்பட்டன. முக்கியமாக எமது போராட்டம் தொடர்பான கருத்துக்களை எப்படி அடுத்த தலைமுறைக்குக் கடத்தப் போகின்றோம் எனும் விடயத்தில் இளையோர்களால் சிறப்பான கருத்துக்களும் ஆலோசனைகளும், அதற்கான பொறிமுறைகளைப் பற்றிய விளக்கங்களும் முன்வைக்கப்பட்டன.

புலம்பெயர் நாடுகளில் பிறந்து வளரும் இளம் தலைமுறைகளுக்கு உணர்வுபூர்வமாக மட்டும் அல்ல அறிவுபூர்வமாகவும் எமது அடையாளம், வரலாறு மற்றும் விடுதலைப் போராட்டம் சார்ந்த விடயங்களைக் கொண்டுசெல்ல வேண்டும் என இளையோர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இளையோர்களுக்கான விளக்கச் சந்திப்புகளை உயர்கல்வி மாணவர்கள் செய்துவருகின்றனர் என்பதையும் இளையோர்கள் அறியப்படுத்தினர். (த)

## மதூஷின் மேலும் இரு சகாக்கள் நாடு கடத்தல்

கொழும்பு, ஏப். 4

பாதாள உலகக் குழுத் தலைவர் மாகந்துரே மதூஷின் மேலும் இரண்டு சகாக்கள் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் நேற்று முன் தினம் காலை 4.50 அளவில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க வானூர்தி நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

டுபாயில் பாதாள உலகக் குழு தலைவர் மாகந்துரே மதூஷ் உடன் 31 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அண்மையில் பாடகர் அமல் பெரேராவின் மகன் மற்றும் கஞ்சிப்பான இம்ரான் உட்பட சிலர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தனர்.

இதனைத்தொடர்ந்து போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்காக தேடப்பட்டு வந்த மொஹமட் சித்தீக் மொஹமட் ஷியாம் மற்றும் வீரசிங்க லங்கா சஜித பெரேரா ஆகியோர் நாடு கடத்தப்பட்டுள்ளனர். குற்றத்தடுப்புப் பிரிவினர் பொறுப்பேற்று விசாரணைகளை நடத்துகின்றனர். (த)

## உடலுறுப்பு வர்த்தகம் குழு ஒன்று கைதானது

### இலங்கையருக்கும் தொடர்பு

கொழும்பு, ஏப். 4

இந்தியாவில் செயற்பட்ட மனித உடல் உறுப்பு சட்டவிரோத வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபட்ட குழு ஒன்று கைது செய்யப்பட்டுள்ளது.

குறித்த குழு இலங்கை, எகிப்து மற்றும் துருக்கி உள்ளிட்ட நாடுகளை மையப்படுத்தி செயற்பட்டு வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள ராச்சகொண்ட பகுதியில் இந்த குழுவைச் சேர்ந்த பெண் ஒருவர் உள்ளிட்ட மூன்று பேர் கைதாகியுள்ளனர்.

இந்தியாவில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களை ஏமாற்றி அவர்களின் சிறுநீரகத்தொகுதி உள்ளிட்ட முக்கிய அவயவங்கள் சிலவற்றை அபகரித்து பணம் பெற்றுக் கொள்ளும் தொழிலை இந்த குழுவினர் நீண்டகாலமாக மேற்கொண்டுவந்துள்ளனர். அண்மையில் இத்தாலிக்கு அனுப்பி வைக்கப்பட்ட இந்தியர் ஒருவரின் சிறுநீரகத்தொகுதி களவாடப்பட்டு அவர் பணமோசடிக்கு உள்ளானதை அடுத்து, அவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் டெல்லியின் குற்றவியல் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுவந்தனர். அதன் அடிப்படையிலேயே குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட குழுவினர் இலங்கை உள்ளிட்ட நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகள் சம்மந்தமாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த)

## ரூ.30 கோடி தராவிட்டால் எதிரணிக்குச் சாய்வேன்

### பிரதி அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு, ஏப். 4

அம்பேபுஸ்ஸ - ஹபரண வீதி அமைக்கும் பணிகளை நிவர்த்தி செய்வதற்காக மேலும் 30 கோடி ரூபா தராத பட்சத்தில் எதிர்வரும் தேர்தலில் எதிரணிக்கு ஆதரவளிப்பேன் என்று போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

தொடருந்துப் பாதை பாதுகாப்புத் தொடர்பில் பொது மக்களை அவதானப்படுத்தும் விதத்தில் அந்தத் தொடருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள அறிவித்தல் பலகையைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2015இல் ஆரம்பிக்கப்பட்ட அம்பேபுஸ்ஸ ஹபரண வீதி வங்கியில் பணம் இல்லை என்ற காரணத்தால் இடைநிறுத்தப்பட்டது. 30 கோடி இல்லாமல் நான் 2015ஆம் வருடத்திலிருந்து கேட்டு வருகிறேன். இந்தமுறை தேர்தலுக்கு முன்னர் இந்தப் பாதையின் அமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகப் பணத்தை வழங்காத பட்சத்தில் அடுத்த தேர்தலில் எதிரணிக்கு ஆதரவளிப்பேன் என்று அமைச்சர் ஹாசிமிடம் தெரிவித்துள்ளேன் - என்றார். (த)

## ஹெரோய்ன் வைத்திருந்தாரென ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 4

ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 2கிராம் 30மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கல்கிஸ்ஸ படோவிட பகுதியில் கல்கிஸ்ஸ பொலிஸார் நேற்றுமுன்தினம் அதிகாலை அவரைக் கைது செய்தனர். விசாரணையின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-61)

### ஜெனிவாவில் உள்ள இலங்கைப் பிரதிநிதி

## அரச அறிவுறுத்தல்படி தீர்மானத்தில் ஒப்பம்

### நிதி அமைச்சர் சமரவீர தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 4

கொழும்பிலிருந்து வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே, ஜெனிவாவில் உ[illegible] வதிவிடப் பிரதிநிதி ஏ.எல்.ஏ. அசீஸ், இலங்[illegible] தொடர்பான தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிக் கையெழுத்திட்டார் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கையெழுத்திட்ட அசீசை, அரசதலைவர் திருப்பி அழைக்க வேண்டும் என்று மகிந்த ஆதரவு அணியினர் கோரி வருகின்றனர்.

அத்துடன், தமக்குத் தெரியாமலேயே ஜெனிவா தீர்மானத்தில் இணை அனுசரணை கையெழுத்து போடப்பட்டது என்று சிறிசேன கூறியிருந்தார்.

இது குறித்து மங்கள சமரவீர மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவாவில் உள்ள வதிவிடப் பிரதிநிதி ஏ.எல்.ஏ. அசீசுக்கு கொழும்பிலிருந்து, தலைமை அமைச்சர் செயலகத்தின் கீழ் உள்ள நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான ஒருங்கிணைப்புச் செயலகத்தின் செயலாளர் நாயகம் மனோ தித்தவெலவே, இணை அனுசரணை தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார்.

30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட நல்லிணக்கச் செயற்பாடுகளை முழுமையாக ஒருங்கிணைக்கும் நோக்கில், நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான ஒருங்கிணைப்புச் செயலகத்தை 2016ஆம் ஆண்டு அமைச்சரவை உருவாக்கியது.

அசீசுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை அயலுறவு அமைச்சர் திலக் மாரப்பனவும் முழுமையாக அறிந்திருந்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)



இந்தியாவின்வடகிழக்குமாநிலமானஅசாமில்உள்ளமோரன்என்கிறநகரில்இந்தியத்தலைமைஅமைச்சர் மோடியின் தேர்தல் பரப்பு ரைக்கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் மோடியின் முகமூடி அணிந்து பா.ஜ.க. ஆதரவாளர்கள் ஒளிப்படத்துக்கு முகம் காட்டிநின்ற காட்சி.



# காங்கிரஸின் தேர்தல் அறிக்கைக்கு பா.ஜ.க. சார்பில் அருண்ஜேட்லி பதில்

புதுடெல்லி,ஏப்.4

ஆட்சிக்கு வந்தால் தாம் நடைமுறைப்படுத்தவுள்ள மக்கள் நலத் திட்டங்கள் குறித்த தமது அறிக்கையைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டார்.

அதில்தேசவிரோதச்சட்டம்நீக்கப்படும்என்று குறிப்பிட்டிருந்தமைகவனம்பெற்றது. பா.ஜ.க. சார்பில் இதைக் குறிப்பிட்டுப் பேசிய அருண் ஜேட்லி, 'தேசவிரோதச்சட்டத்தைநீக்குவோம் என்று வாக்குறுதி கூறும் காங்கிரஸ் கட்சி ஒரு வாக்குக்குக் கூட பெறத் தகுதியற்றது.

இந்த வாக்குறுதிகளில் பல திட்டங்கள் தேசத்தை உடைப்பதாகும். பயங்கரவாதத்தில் ஈடுபட்டால் அது ஒரு போதும் அவர்கள் பார்வையில் இனிக் குற்றமாகாது. ராஜீவ் காந்தி தடா கொண்டு வந்தார், நரசிம்மராவ் அதை நீக்கினார். மன்மோகன் சிங் பொடாவைத் தள்ளுபடி செய்தார்.

காங்கிரஸ் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் கிளர்ச்சியாளர்களும், பயங்கரவாதமும் தன் நம்மை ஆளும். இதைக் காங்கிரஸ் ஏற்படுத்தநினைத்தால்அதைஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தார்.

# விபூதி தரித்த திருமாவளவன் கீச்சகத்தில் பா.ஜ.க. கிண்டல்

சிதம்பரம்,ஏப்.4

நெற்றி நிறைய விபூதியுடன் வாக்குச்சேகரித்தவிடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு மாவளவனைக்கிண்டலடிக்கும்விதமாகக் கீச்சகப் பக்கத்தில் பா.ஜ.க. கார்ட்டூன் ஒன்றை வெளியிட்டு தி.மு.க கூட்டணியில் சிதம்பரம் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் திருமாவளவன் சிதம்பரம் நடராஜர் கோயிலுக்குச் சென்ற போது தீட்சிதர்கள் சால்வை அணிவித்து அவரை வரவேற்றனர்.

கோயில் நடைமுறைப்படி மேற்சட்டையைக் கழற்றிவிட்டுச் சித்சபைக்குச் சென்ற திருமாவளவன் நடராஜரைத் தரிசனம் செய்தார். கோயில்வளாகத்தில்சிறிது நேரம் அமர்ந்துதீட்சிதர்களிடம்உரையாடினார். இதன்போதுநெற்றிநிறைய விபூதியுடன்திருமாவளவன் இருந்தார். இந்த ஒளிப்படங்கள் இணையத்தில் வெளியாகிக் கிண்டலுக்கு ஆளாகின. 'சனாதனத்தைஒழிக்க நாட்டிலுள்ள அனைத்து இந்துக் கோவில்களையும்அகற்றவேண்டும் என்று அன்று தெரிவித்தவர், ஐயா இந்துக்களே! உங்கள் வாக்கை எனக்குப் போட்டு என்னைக் காப்பாற்றுங்க. ஐயா காப்பாற்றுங்க என்று இன்று தெரிவிக்கிறார் என்பதாகத் திருமாவளவனைப் கிண்டல் செய்யும் தொனியில் குறித்த படங்களைத் தனது கீச்சகப் பக்கத்தில் பா.ஜ.க. பதிவிட்டிருக்கிறது.






# இன்றைய நாள்

**மேடம்:** சுயநலத்துடன் சிலர் உதவி செய்ய முன் வருவர். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். நிலுவைப் பணம் வசூலாகும். ஆரோக்கியம் பலம் பெறும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**இடபம்:** முக்கிய பணியை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில் வியாபாரம் சீர் பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணவரவை விட செலவு அதிகரிக்கும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** பலரும் உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி வளரும்.

**கடகம்:** வாக்குறுதி நிறைவேற தாமதமாகலாம். பொறுமையுடன் செயல்படுவது நல்லது. தொழிலில் சுமாரான லாபம் கிடைக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**சிம்மம்:** நல்லவர்களின் நட்பால் உதவி கிடைக்கும். புதிய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரம் செழிக்கும். உபரி வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** வாழ்வில் குறுக்கிடுகிற சிரமத்தை சரி செய்ய முயல்வீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணக்கடனில்பெரும்பகுதியைச்செலுத்துவீர்கள்.

**துலாம்:** நண்பர்களின் செயலால் அதிருப்தி உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். பிள்ளையைக் கண்டிப்பதில் நிதானம் தேவை.

**விருச்சிகம்:** மதி நுட்பத்துடன் செயல்படுவீர்கள். கடந்த கால முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் உயரும். பெற்றோரின் தேவையைஅறிந்துநிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** சிறிய முயற்சியிலும் பெரிய நன்மை காண்பீர்கள். விலகிச் சென்ற நண்பரும் அன்பு பாராட்டுவார். தொழில் வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்:** கடந்த கால் உழைப்பின் பலனைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் லாபம் உயரும். பெண்கள் புத்தாடை நகை வாங்க யோகம் உண்டு.

**கும்பம்:** வழக்கத்திற்கு மாறாக பணிச்சுமை அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** பிறருக்காக தகுதி மீறிய வாக்குறுதி தர வேண்டாம். உறவினர் வருகை யால் பெண்களுக்கு வீட்டுச் செலவு எகிறும். உடல்நலனுக்காக சிகிச்சை தேவைப்படலாம்.

# ஒருவீட்டில்40வாக்காளர்கள்; களைகட்டும்கூட்டுக்குடும்பம்

கிருஷ்ணகிரி,ஏப்.4

தமிழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி ஒன்றியம் உல்லட்டிஊராட்சிக்குஉட்பட்டகிராமமானஎட்டிப்பள்ளியில் 4 தலைமுறைகளாகச் சேர்ந்து வாழும் கூட்டுக் குடும்பம் ஒன்றில் எல்லாமாக 40 வாக்காளர்கள் இருக்கின்றனர். இதனால், தேர்தல்நேரங்களில்இவர்களதுவீடுகளைகட்டிவிடுகிறது. இந்தக் குடும்பத்தில் எல்லாமாக 60 பேர் உள்ளனர். தங்கள் குடும்பம் பற்றிக் குடும்ப உறுப்பினரில் ஒருவரான முனுசாமிகூறியதாவது: "எங்கள்குடும்பஉறுப்பினர்களில் சிலர் கல்வி, வேலைக்காக வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும் வசிக்கின்றனர். வீட்டில் விசேஷம் என்றால், அனைவரும் வந்துவிடுவார்கள். வீடே கலகலப்பாகிவிடும். எங்கள் குடும்பத்தில் 40 வாக்காளர்கள் இருக்கிறோம். தேர்தல் சமயங்களில், அனைத்துக் கட்சியினரும் எங்கள் வீட்டுக்கு வந்து வாக்குக் கேட்பார்கள். அதனால், வெளியூர்களில் இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் வீட்டுக்கு வந்துவிடுவார்கள். வீடே விழாக்கோலம் பூண்டுவிடும். நாங்கள் அனைவரும் ஒன்றாகக் கலந்து பேசி, மக்களுக்கும், விவசாயத்துக்கும் யார் நல்லது செய்வார்கள் என்று தீர்மானித்து வாக்களிப்போம். வரும் மக்களவைத் தேர்தலிலும் எங்கள் குடும்ப உறுப்பினர்கள் 40 பேரும் தவறாமல் வாக்களிப்போம்"- என்றார்.



# மக்கள் எதிர்த்ததன் எதிரொலி அல்ஜீரிய அதிபர் பதவி விலகல்

அல்ஜியர்ஸ்,ஏப்.4

நாடு முழுவதும் எழுந்த எதிர்ப்புகளின் எதிரொலியாக அல்ஜீரியா அதிபர் அப்தெலாசிஸ் பவுடேபிலிகா, தான் பதவி விலகுவதாக அறிவித்தார்.



அல்ஜீரியாவின் அதிபராகத் தொடர்ந்து 4ஆவது முறையாகப் பதவியில் இருக்கும் அவர், 5 ஆவது முறையாக மீண்டும் அதிபர் பதவிக்குப் போட்டியிடத் திட்டமிட்டார்.

இதற்கு நாடு முழுதும் எதிர்ப்புக் கிளம்பியது. மாதக்கணக்காக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மீண்டும்போட்டியிடும் திட்டத்தைத் திரும்ப பெற்ற அப்தெலாசிஸ், எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெற வேண்டிய தேர்தலைத் தள்ளிவைத்தார். ஆனாலும் போராட்டங்கள் தொடர்ந்தன.

இதனால் உடல்நலக்குறைவு காரணமாக நாட்டில் அதிபர் பதவி வெறுமையாக இருப்பதை அறிவிக்கவும், நாட்டை நிர்வ கிப்பதற்கு அரசமைப்புக் குழு ஒன்றை அமைப்பதற்காகவும் அதிபர் அப்தெலாசிஸ் புதிய அமைச்சரவையை அமைத்தார். இதன் தொடர்ச்சியாக அதிபர் பதவியில் இருந்து அவர் விலகுவதாக அறிவித்தார். அவரது இந்த அறிவிப்பு வெளியானதும், பொதுமக்கள் அதைக் கொண்டாடும் வகையில் தமது மகிழ்வை வெளிப்படுத்தினர்.





## டொனால்ட் ட்ரம்பின் வீட்டுக்குள் நுழைய முயன்ற பெண் கைது

வோஷிங்டன்.ஏப்.4

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் வீட்டுக்குள் நுழைய முயன்ற சீனப்பெண் கைது செய்யப்பட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில், பால்ம் கடற்கரைப் பகுதியில் உள்ள ட்ரம்பின் மார்எலாகோ வீட்டுக்குள் சீனாவைச் சேர்ந்த யூஜிங் ஜங் என்பவர் நுழைய முற்பட்டார். அங்குள்ள சோதனைச் சாவடியில் இருந்த அதிகாரிகள் அவரை விசாரித்தனர்.

அந்தப்பெண் உள்ளே உள்ள நீச்சல் குளத்துக்குள் குளிக்கச் செல்வதாகக் கூறியுள்ளார்.

ஆனால் அவரிடம் நீச்சல் உடைகள் இருந்திருக்கவில்லை. அவருடைய நடவடிக்கைகளில் சந்தேகமடைந்த அதிகாரிகள் அந்தப் பெண்ணிடம் விசாரணை மேற்கொண்டனர். முதற்கட்ட விசாரணையில் அந்தப் பெண் ஐக்கிய தேசிய சீன அமெரிக்க கூட்டுறவு சங்கத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சியில் கலந்துக் கொள்ள வந்தமை தெரிய வந்தது. அந்தப் பெண்ணைக் கைது செய்து, அவர் வைத்திருந்த உடமைகளைச் சோதனை செய்ததில், சீனக் கடவுச்சீட்டுகள், 'வைரஸ்' நிரம்பிய 'பென்டிரைவ்' மற்றும் அலைபேசிகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டதாகத் தெரி விக்கப்பட்டது.



## ஈரானில் பலத்த மழை வெள்ளத்தால் பலர் சாவு

தெஹ்ரான்.ஏப்.4

ஈரானில் கடந்த இரண்டு வாரங்களாகப் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 47 பேர் சாவடைந்துள்ளனர். ஒரு லட்சத்துக்கு அதிகமான மக்கள் மாற்று இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வெள்ளத்தில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது. இந்த மழை காரணமாக ஈரானில் உள்ள குளங்கள் 95சதவீதமளவுக்கு நிரம்பிவிட்டதாக ஈரான் அரசு தெரிவித்தது.

மீட்புப் பணிகள் விரைந்து நடைபெறுவதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி செய்து தரப்படும் என்று ஈரான் அதிபர் ஹசன் ரவ்ஹானி தெரிவித்தார்.

## நிறுத்தப்பட்டது நிதியுதவி ட்ரம்ப் அதிரடி

வோஷிங்டன்,ஏப்.4

மத்திய அமெரிக்க நாடுகளான எல்சால்வேடர், ஹோண்டுராஸ், கவுதமலா ஆகியவற்றுக்கு அமெரிக்கா வழங்கி வந்த நிதி உதவி நிறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து அமெரிக்காவின் அரச செய்தித் தொடர்பாளர் கூறும்போது, "அதிபர் ட்ரம்பின் வழிகாட்டலில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்றின் ஒப்புதல் பெற்று இந்த 3 நாடுகளுக்கும் வழங்கப்படும் நிதி உதவி முற்றிலும் நிறுத்தப்படும்" என்றார்.

மெக்சிக்கோ ஊடாக எல்சால்வேடர், கவுதமலா, ஹோண்டுராஸ் உள்ளிட்ட மத்திய அமெரிக்க நாடுகளில் இருந்து மக்கள் அகதிகளாக அமெரிக்காவுக்குள் நுழைகின்றனர்.

அதை நிறுத்தும் நடவடிக்கையில் ட்ரம்ப் ஈடுபட்டுள்ளார். எல்சால்வேடர் உள்ளிட்ட மத்திய அமெரிக்க நாடுகளில் இருந்து சட்டவிரோதமாகப் பலர் நுழைவதால் மெக்சிக்கோ எல்லையை மூடப்போவதாக ட்ரம்ப் கூறியிருந்தார்.

எல்லைச் சுவர் கட்ட நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த நிலையிலேயே மேற்குறித்த நாடுகளுக்கு அமெரிக்காவால் வழங்கப்பட்டு வந்த நிதி உதவி நிறுத்தப்பட் டுள்ளது.

## வெனிசுலாவில் தொடர் குழப்பம்

கரகஸ்.ஏப்,4

வெனிசுலா அரசு, அந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரான குவைன் குவைடோவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை நீக்கும் வகையிலான தீர்மானத்தை நிறைவேற்றியது.

அத்துடன் குவைடோவின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும், சகல சலுகைகளையும் மீளப்பெற வும் வெனிசுலா அரசு முடிவு செய்துள்ளது. இதன் அடிப்படையில் குவைடோ கைது செய்யப்படலாம் என்று கூறப்பட்டா லும் அது சம்பந்தமான எதுவித விவரங்களும் வெளியிடப்படவில்லை. வெனிசுலா -கொலம்பியா எல்லையில் உள்ள பாலங்கள் மூடப்பட்டுள்ள நிலையில் டுச்சிரா ஆற்றைக் கடந்து ஆயிரக்கணக்கான வெனிசுலா மக்கள் கொலம்பியாவில் தஞ்சம் அடைகின்றனர்.

நெருக்கடிகளும், அரசியல் குழப்பங்களும், வறுமையும் நிறைந்துள்ள வெனிசுலாவிலிருந்து மக்கள் வெளியேறும் படலமும் அரசுக்கு எதிரான மக்களின் எழுச்சியும் தொடர்ந்து வருகிறது.

## ஆப்கானிஸ்தானில் ஆயுததாரிகள் தாக்குதல்

*8 பொலிஸார் சாவு*

*6 பேர் படுகாயம்*

காபுல்.ஏப்.4

ஆப்கானிஸ்தானில் பொலிஸ் முகாம் ஒன்றின் மீது ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 8 பொலிஸார் சாவடைந்தனர். 6 பேர் படுகாயம் அடைந்தனர். ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் படையினர் மீதான தங்களது தாக்குதல்களைத் தலிபான்கள் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையிலேயே பால்க் மாகாணம், சோல்கரா மாவட்டத்தின் சாய்கான் கிராமத்தில் செயற்பட்டுவந்த ஏ.எல்.பி. எனும் பொலிஸ் முகாம் தாக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு நடந்த இந்தத் தாக்குதலில் ஆயுததாரிகள் துப்பாக்கிகளையும், கைக் குண்டுகளையும் பயன்படுத்தினர். திடீரென்று நடந்த இந்தத் தாக்குதலால் அங்கிருந்த பொலிஸார் நிலைகுலைந்து போயினர் என்று தெரிவிக்கப்படுகிறது.





நேபாளத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் மக்கள் பெரும் இடரை எதிர் நோக்கினர். இந்த நிலையில் அங்கு கடும் புயல் ஏற்பட்டது. பலர் பரிதாபமாகச் சாவடைந்தனர். நேபாளம், பரா மாவட்டத்தில் புயல் தாக்கிய ஒரு வீடு முற்றாகச் சிதைவடைந்துவிட்டதைச் சித்திரிக்கும் ஒளிப்படம் இது.




உள்நாட்டுப்போர் இடம்பெற்று வரும் ஏமனில் கொலரா நோயின் தாக்கம் அண்மைக் காலமாக மிகமிக அதிகமான வகையில் உள்ளது என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது.

## கட்டடம்...

அமைச்சர் ரிசாட் பதியுதீன்.

வடக்கு - கிழக்கு அபிவிருத்திச் செயலணியில் 6ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. இந்த அமர்விலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை அங்கே இயங்காது. மீளமைக்கப்படாது பாழடைந்து காணப்படும் நிலையில் யாரோ சிலர் ஒட்டுசுட்டான் ஓடு என்னும் பெயரில் ஓடு தயாரித்து விற்பனை செய்கின்றனர். இது எவ்வாறு என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜாவால் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரிசாட் பதியுதீன் அந்தத் தொழிற்சாலை தொடர்பில் அமைச்சர் கிரியெல்லவிடமே கேட்க வேண்டும். ஏனெனில் அவரின் காலத்திலேயே அது ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம-105)

## மணல்..

நேற்றுப் பரிசோதித்துள்ளனர்.

மிகப்பெரும் போதைப் பொருள் சூத்திரதாரிகளை தூக்கிலிடுவதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதற்கான ஆயத்தங்கள் தற்போது மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில், தூக்கிலிட பயன்படுத்தும் தூக்குமேடையை அதிகாரிகள் நேற்று பரிசோதித்துள்ளனர். இதன்போது மணல் மூட்டையொன்று தூக்கிட்டு பரிசோதிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அதிகரிக்கும் குற்றச்செயல்களுக்கு போதைப்பொருளே காரணம் என்று தெரிவித்துள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, விமர்சனங்களை கடந்து தூக்குத்தண்டனையை நிறைவேற்றுவேன் என உறுதியாகக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில், முதற்கட்டமாக தூக்கிலிடப்படவுள்ளோரின் பட்டியல் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில், தற்போது தூக்குமேடை பரிசீலிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, நிலையான சமாதானத்தை நோக்கி நகரும் இலங்கை, தூக்குத்தண்டனையை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று மனித உரிமை அமைப்புகள் மற்றும் சமூகநல அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தோற்கடிக்கப்பட்ட...

படவுள்ளது.

சம்பிக்க ரணவக்கவின் கீழ் உள்ள பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சினதும், வஜிர அபேவர்த்தனவின் கீழ் உள்ள உள்துறை மற்றும் உள்நாட்டு விவகாரங்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சினதும் நிதி ஒதுக்கீடுகள் கடந்த மாதம் 28ஆம் திகதி நடந்த குழுநிலை விவாதத்தின்போது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் தோல்வி கண்டன.

இதனால், சுமார் ஐந்தரை இலட்சம் அரச பணியாளர்களுக்கு சிங்கள தமிழ் புத்தாண்டுக்கு முன்னதாக ஊதியம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், மேற்படி இரண்டு அமைச்சுக்களுக்குமான நிதி ஒதுக்கீடுகள் சில திருத்தங்களுடன் இன்று மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (ம)

## எரிபொருள்....

படும் என்று தனியார் பேருந்துகளின் உரிமையாளர் சங்கம் நேற்று அறிவித்தது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அந்த அமைப்பு இவ்வாறு அறிவித்தது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் செயலர் அஞ்சன ப்ரியஞ்சித் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 10ஆம் திகதி எரிபொருள் விலைகளை அரசு அதிகரித்தால், குறிப்பாக டீசல் விலை 4 ரூபாவால் அதிகரிக்கப்பட்டால் அடுத்த நாளே பேருந்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்படும். ஆனால் குறைந்தபட்ச கட்டணம் 12 ரூபா என்பதில் மாற்றம் இருக்காது - என்றார். (ம)

## யாழ்ப்பாண...

மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் கடமையேற்குமாறு கொழும்பு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளரான ரி.சத்தியமூர்த்தியை தற்போதைய பதவிக்கு மேலதிகமாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் பணியாற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கோரப்பட்டுள்ளமை தொடர்பில் மருத்துவமனையின் பணிப்பாளரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, இரு நிலைகளிலும் பணியாற்றுமாறு வாய்வாரியாக கோரப்பட்டது. இரண்டும் மிகவும் முக்கியமான பணிகள். அதனால் பணியாற்றுவது சற்றுக் கடினமான செயல் என்பதனை தெரிவித்திருந்தேன். எனினும் எழுத்து மூலமான எவ்வித உத்தரவும் கிடைக்கவில்லை - என்றார். (ம-105)

## வடக்கு...

வடக்கு - கிழக்குக்கான அபிவிருத்திச் செயலணியின் ஆறாவது கூட்டம் அரசதலைவர் தலைமையில் அரசதலைவர் மாளிகையில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் படையினர் வசமுள்ள நிலத்தை விடுவிப்பது தொடர்பிலும், நில விடுவிப்புத் தொடர்பில் இதுவரை வெளிவந்த தகவல்கள் தொடர்பிலும் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

குறித்த செயலணியின் ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், முல்லைத்தீவில் கேப்பாபிலவு, யாழ்ப்பாணத்தில் வலி வடக்கு, திருகோணமலை என பல இடங்களில் நிலம் விடுவிக்கப்படும் என உத்தரவாதம் வழங்கப்பட்டது. அதனை நானும் தெரிவித்திருந்தேன். இந்த நிலையில் இவை எவையுமே இன்று வரையில் விடுவிக்கப்படவில்லை. அதற்குரிய பதில் வேண்டும் - என்றார்.

இதையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கடந்த கூட்ட அறிக்கையிலும் ஐ.நா கூட்டத்தொடரிலும் மக்களின் 90 வீதமான நிலம் விடுவிக்கப்பட்டது என்று பொய்யான தகவல் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு 90 வீதமான நிலம் விடுவிக்கப்பட்டிருப்பின் அவற்றின் விவரத்தைச் சமர்ப்பியுங்கள். அந்த விவரத்திலும் கடந்த கூட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 24 ஆயிரத்து 900 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டதாகக் கூறுகின்றீர்கள். அவ்வாறு 24 ஆயிரத்து 900 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டிருந்தால் அதன் விபரத்தை தருமாறு கடந்த செயலணியில் கோரியபோது இம்முறை சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்பட்டது. அவ்வாறானால் அதன் விவரம் எங்கே? என கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் எழுப்பும் கேள்வியின் பதிலை வழங்குமாறு படைத் தரப்பை அரச தலைவர் கோரினார். குறித்த விவரங்கள் நிலங்கள் விடுவிக்கும்போதே மாவட்டச் செயலர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என படையதிகாரி பதில் வழங்கினார். அவ்வாறான விபரம் மாவட்டச் செயலரிடம் சமர்ப்பிக்கப்பட்டதா என மாவட்டச் செயலர் பதிலளிக்க வேண்டும் எனத் தெரிவித்தபோது, கிளிநொச்சி மாவட்டச்செயலர் மக்கள் வாழ்விடங்களில் விடுவிக்கப்பட்ட அளவு விவரமே உள்ளது. வனப் பகுதிகளிலும் குறிப்பிட்ட அளவு ஏக்கர் விடப்பட்டாலும் அதன் அளவு தொடர்பான விவரம் கிடையாது எனத் தெரிவித்தார்.

இதன்போது மீண்டும் குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் இவ்வாறு எமக்கும் தெரியாது மாவட்டச் செயலருக்கும் தெரியாது எனில் எங்கு அந்த நிலம் விடப்பட்டது. இவ்வாறு தவறான அறிக்கைகள் மட்டுமே விடப்படுகின்றன. அன்றி மக்கள் கோரும் வாழ்விடங்களோ வாழ்வாதார இடங்களோ விடப்படவே இல்லை. எனில் இந்த கூட்டத்தால் என்ன பயன்? எனக் கடும் தொனியில் தெரிவித்தார்.

இதையடுத்து 'இது நாடாளுமன்றம் இல்லை. இங்கே உரத்துக் குரல்கொடுக்க முடியாது' என்று கூட்டமைப்பினரைக் கடிந்துகொண்டார் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதன்போது, குறித்த மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன் விவரத்தை பலதடவை கோரிவிட்டார். அதனை வழங்க மறுப்பது ஏன்? அதனை வழங்கினால் இந்தச் சர்ச்சைக்கு தீர்வாக அமையும். அல்லது சந்தேகம் நியாயமானது என்றார். இறுதியில் வடக்கு - கிழக்கில் படையினர் வசமுள்ள நிலங்களை விடுவிப்பது தொடர்பில் உடனடியாக மாகாண ஆளுநர்கள் தலைமையில் மாவட்டம் தோறும் படையினர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலர் கூடி ஆராய்ந்து விடுவிக்க வேண்டிய நிலம் தொடர்பில் அடுத்த கூட்டத்துக்கு இடையில் அறிக்கை வழங்க வேண்டும். அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தலைவர் தெரிவித்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவ்வாறு இறுதித் தீர்வு எட்டப்படும் வரையில் எங்கும் நில சுவீகரிப்பு மற்றும் அளவீடுகளுக்கு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது என்றார். அதனை அரச தலைவரும் ஏற்றுக் கொண்டார். (ம-105)

## 72 ஆசனங்களையுடைய...

வடக்கு கிழக்குக்கான அபிவிருத்திச் செயலணியின் 6ஆவது கூட்டம் அரச தலைவர் தலைமையில் கொழும்பில் நேற்று இடம் பெற்றது. இதில் பலாலி வானூர்தி நிலையம் தொடர்பிலான அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா கேள்வி எழுப்பினார். இதற்கப் பதிலளிக்கும்போதே சிவில் வானூர்தி சேவைப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பலாலி வானூர்தி நிலைய தற்போதைய ஓடுபாதையில் 72 ஆசனங்களை உடைய வானூர்திகளைத் தரை இறக்க முடியும். 72 ஆசனங்களையுடைய வானூர்திகளைப் பயன்படுத்தி யாழ்ப்பாணம் - கொழும்பு வானூர்திச் சேவையை ஆரம்பிக்கும் வகையில் உடனடியாக அதற்கான அலுவலக வசதிகளை ஏற்படுத்துமிடத்து மிக விரைவில் வானூர்திகளை இயக்கலாம் என்றார். (ம105)

## நீதியும்...

பிரித்தானிய நாடாளுமன்றத்தில், கரேத் தோமஸ் என்ற உறுப்பினர், பெரிய மனித உரிமை மீறல் குற்றவாளிகளை நீதியின் முன்நிறுத்தத் தவறும் இலங்கை மீது எடுக்கும் நடவடிக்கைகள் என்ன என்று கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்து உரையாற்றிய பிரிட்டனின் அயலுறவுத்துறைச் செயலர் ஜெர்மி ஹன்ட்,

'ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்துக்கான அமைச்சர், இலங்கை அரசுடன் தனது தொடர்புகளின் ஊடாக, மகத்தான வேலைகளை செய்துள்ளார். இந்த விவகாரத்தை எழுப்புவது முற்றிலும் சரியானது. இதுபற்றி இந்த நாட்டில் வாழும் இலங்கைச் சமூகத்தினர் பலர் அக்கறை கொண்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது, இலங்கையில் பத்தாண்டுகளுக்கு முன்னர் இருந்ததை விட இப்போது நல்ல நிலமை காணப்படுகிறது.

எவ்வாறாயினும், நடந்த தவறுகள் தொடர்பான நீதியும், பொறுப்புக்கூறலும் இல்லாமல் அங்கு நிலையான அமைதி சாத்தியப்படாது' என்று தெரிவித்தார்.

(ம)

# இன்றைய ஆட்டங்கள்

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாதகல் சென். தோமஸ் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

+++

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிப் போட்டிகள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து தையிட்டி திருக்குடும்பம்விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி மின்னொளி விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

+++

முல்லைத்தீவு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான, அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளம்பறவை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

+++

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டத் தொடரின் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளன.
இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி யூத் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கம்பன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)



# எட்டு இலக்குகளால் ஹாட்லிஸை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது சென்றலைட்ஸ்

யாழ்ப்பாணம், ஏப். 4
ஹாட்டிலிஸ் விளையாட்டுக்கழக அணியை 8 இலக்குகளால் வீழ்த்தி இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி.
அரியாலை 100ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்திய ரி-20 துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டம், சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.
சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஹாட்லிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பிரதீப், பிரசாந்தன் இருவரும் 22 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் ஜெரிக்துசாந் 5 இலக்குகளையும், டார்வின் 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.
99 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 15.3 பந்துப் பரிமாற்றங்களில் [illegible] இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. கௌதமன் 33 ஓட்டங்களையும், [illegible]ரியலக்சன் 20 ஓட்டங்களையும், ஜெரிக்துசாந் 17 ஓட்டங்களையும், நிரோசன் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். (ஒ.23)



சிவானுஜா சிறப்பாட்டம்

# வெற்றி பெற்றது நண்பர்கள் வி.க.

யாழ்ப்பாணம், ஏப். 4
சிவானுஜாவின் சிறப்பான ஆட்டத்தின் உதவியுடன் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி.
நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் இந்;துக்கல்லூரி கூடைப்ந்தாட்ட திடலில் இடம்பெற்றது.
இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி மோதியது. 35:32 என்ற புள்ளி அடிப்படையில் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. (ஒ.23)

# அரையிறுதி ஆட்டங்கள் இன்று

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடாத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று வியாழக் கிழமை கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

+++

நாவாந்துறை கலைவாணி விளையாட்டு கழகம் நடாத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று வியாழக் கிழமை கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்;கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)

# வலி. கிழக்கு விளையாட்டு நிகழ்வு

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலக சமுர்த்தி மாவட்ட பணிப்பாளர் க.மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் இ.குருபரன், மதிப்புறு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டு திணைக்கள ஓய்வு பெற்ற பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுத்துறை அலுவலர் க.விஜிதரன், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முதல்வர் ச.வேலழகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ.422)

## உலகக் கிண்ண நியூசி. அணி அறிவிப்பு

மே மாதம் ஆரம்பமாகும் உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடவுள்ள அணிகள் இந்த மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் தங்களது அணியின் பெயர்ப் பட்டியலை வெளியிட வேண்டும் என பன்னாட்டுக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது. இந்த நிலையில் நியூசிலாந்து அணி உலகக் கிண்ண கிரிக்கெட் அணியை அறிவித்துள்ளது.

நியூசிலாந்து அணி இதுவரை உலகக் கிண்ணத்தை வென்றது இல்லை. கடந்த 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் அந்த அணி இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவிடம் தோற்று கிண்ணத்தை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து அணி வீரர்கள் விவரம்:

வில்லியம்சன் (அணித் தலைவர்), மார்ட்டின் குப்தில், நிக்கோலஸ், ரெய்லர், டாம் லாதம், கொலின் முன்ரோ, டாம் பிளண்டல், ஜிம்மி நீசம், கிராண்ட் ஹோம், சான்ட்னெர், சோதி, டிம் சவுத்தி, மேட் ஹென்றி, பெர்குசன், டிரென்ட் போல்ட்.

## ஐ.பி.எல். போட்டியில் இரண்டாவது அபராதம்

சென்னை - ராஜஸ்தான் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் ராஜஸ்தான் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் வீச ஐ.பி.எல். விதிகளின்படி நிர்ணயித்த நேரத்தைவிட கூடுதலாக எடுத்துக்கொண்டது. இதனால் மெதுவாக பந்து வீசியதற்காக ராஜஸ்தான் அணித் தலைவர் ரகானேவுக்கு 12 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த ஐ.பி.எல். போட்டியில் அபராதம் விதிக்கப்பட்ட 2ஆவது அணித் தலைவர் ரகானே ஆவார். பெங்களூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் மெதுவாக பந்து வீசியதற்காக மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ரோகித் சர்மாவுக்கு12 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக் கது.






# பெங்களூரை வீழ்த்தி ராஜஸ்தான் முதல் வெற்றி



12 ஆவது ஐ.பி.எல். தொடரின் 14ஆவது போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் ராஜஸ்தான் அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது. பெங்களூர் அணிக்கு இது நான்காவது தோல்வி ஆகும். மீதமுள்ள 8 போட்டிகளிலும் பெங்களூர் அணி வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணி முதலில் பெங்களூர் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. பெங்களூர் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கோக்லி, பட்டேல் களமிறங்கினர். அணி 4 இலக்குகளை இழந்து நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 158 ஓட்டங்களைப் பெற்றது. அணி அதிகளவு இலக்குகளை இழக்காத போதிலும் ஓட்டங்களைக் குவிக்க தவறியிருந்தது. அணித் தலைவர் கோக்லி நடைபெற்று முடிந்த போட்டிகள் அனைத்திலும் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதிகபட்சமாக பட்டேல் 67 ஓட்டங்களைப் பெற்றார். ஸ்ரோனிஸ் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் கோபல் 3 இலக்குகளையும், ஆர்ச்சர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணி 19.5 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. பட்லர் 59 ஓட்டங்களையும், சிமித் 38 ஓட்டங்களையும், ரிப்பத்தி ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களையும் பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்டனர்.

பந்து வீச்சில் சாஹல் 2 இலக்குகளையும், மொகமட் சிராச் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ராஜஸ்தான் அணியின் கோபல் தெரிவு செய்யப்பட்டார்.

## சதுரங்கத்தில் கொக்குவில் இந்து சம்பியனாகியது

யாழ்ப்பாணம், ஏப். 4

கேகாலை சென்.ஜோசப் மகளிர் கல்லூரி தேசிய ரீதியில் நடாத்திய சதுரங்கப் போட்டியில் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை கேகாலை உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. (ஓ.422)




### விறுவிறுப்பானஆட்டத்தில்

## ரியல் மட்ரிட் அபார வெற்றி

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி 3: 2 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

ரியல் மட்ரிட்- ஹஸ்கே அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் சிறப்பாக ஆடினர். ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்தில் ஹஸ்கே அணி வீரர் ஹர்நன்டா ஒரு கோலைப் போட்டார். அடுத்த 25ஆவது நிமிடத்தில் மட்ரிட் அணி வீரர் இஸ்கோ ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டம் இரு அணிகளும் சமநிலையில் காணப்பட்டது. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்த நேரம் முதல் இரு அணி வீரர்களும் விறுவிறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஆட்டத்தின் 62ஆவது நிமிடத்தில் மட்ரிட் அணி வீரர் டானி கபலொஸ் ஒரு கோலைப் போட்டார். பதிலுக்கு அடுத்த 12ஆவது நிமித்தில் ஹஸ்கே அணி வீரர் இட்சுயிட் ஒரு கோலைப் போட இறுதி நேரத்தில் ஆட்டம் விறுவிறுப்பானது. இரு அணி வீரர்களும் போட்டி போட்டுக் கொண்டு விளையாடினர். ஆட்டத்தின் இறுதி ஒரு நிமிடத்துக்கு முதல் 89ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணி வீரர் பென்ஸிமாசிறப்பானஒருகோலைப் போட ரியல் மட்ரி அணி அபார வெற்றி பெற்றது.



## திமுத் கருணாரத்னவுக்கு தண்டம்



மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய குற்றத்துக்காக

இலங்கைக் கிரிக்கெட் வீரர் திமுத் கருணாரத்னவுக்கு அபராதம் விதிக்கப்பட் டுள்ளது.

திமுத் கருணாரத்ன மதுபோதையில் வாகனம் செலுத்தி முச்சக்கர வண்டியொன்றுடன் மோதி விபத்தை ஏற்படுத்திய குற்றத்துக்காக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்த நிலையில் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் திமுத் கருணாரத்ன பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் மறுநாள் அவர் நீதிமன்றத்தில் முன்னிலை யாகியிருந்தார். இந்த நிலையில் இலங்கை கிரிக்கெட் சபையால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் குறித்த விபத்தை ஏற்படுத்தியமைக்காக அவருக்கு 7500 அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு

பண்டத்தரிப்பு முல்லையடி, புனித மரியா வீதி, ஆயுள்வேத வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு
077 729 0856, 077 382 1700

## Techno World
### தொழில்நுட்பப் பிரிவு

A/L 2021 ஆரம்பம்

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.

06.04.2019
சனிக்கிழமை
காலை 8.30

077 017 5346
077 170 3549
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## A/L பொருளியல் 8
### இலங்கையின் பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி & கொள்கைகள்

2019 A/L புதிய பாடத்திட்டம் - இறுதி இரு அலகுகளுக்குரியது

- பரீட்சை வினாக்களுக்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்டது
- ஆசிரியர் வழிகாட்டியிலுள்ள பிழைகள் திருத்தப்பட்டு மேலதிக விடயங்கள், உதாரணங்கள், வினா - விடைகள், சிறப்புக் குறிப்புக்கள், வழிகாட்டல்கள், குறிப்புக்கள், பரீட்சை நுட்பங்கள், ஆகப்பிந்திய தரவுகள், தகவல்கள் & வர்ணப் பக்கங்களில் விளக்கப்படங்கள் அடங்கியது.

2015 A/L & 2016 A/L பரீட்சையில் 99 புள்ளிகளும்
2017 A/L & 2018 A/L பரீட்சையில் 100 புள்ளிகளும்
100/100

ரூபா 350

பெறவைத்த நூல்களின் ஆசிரியர்
வேலாயுதம் கருணாகரன்
60 YEARS
* 04.04.2019 அகவை 60இன் வெளியீடு

2019 பழைய பாடத்திட்டப் பரீட்சைக்குரிய வினாவிடை & MCQ நூல்களும்

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
Lanka Book Depot, Colombo - 12 T.P - 011-2341942

## NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.

### A/L 2021
கலை, வர்த்தகம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
06.04.2019 சனி, காலை 8.00 மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
A/L 2019, 2020, Day Class
பிரிவுகளுக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

## BARATHY
சித்தன்கேணி

அண்மையில் வெளிவந்த O/L பரீட்சையில் அதி உயர் பெறுபேறுகளை பெற்று உங்கள் பாடசாலைக்கும் எங்கள் நிறுவனத்திற்கும் பெருமையீட்டித் தந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டி இது போல நீங்களும் சிறந்த பெறுபேறுகளை பெற்றிட

### O/L DAY CLASS
நாளை ஆரம்பம் 05.04.2019
வெள்ளிக்கிழமை 8.00 Am
எமது வழமையான ஆசிரியர் குழுவினால்
அனுமதிகளை உடன் பெற்றுக் கொள்ளவும்.

## D.C.M-யாழ்நகர்
(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகில்)

### A/L - 2021
கலை, வர்த்தக புதிய பிரிவுகள்
ஆரம்பம்:
06.04.2019 சனிக்கிழமை
நேரம்:
காலை - 9.00 மணியளவில்
077 011 9434 நிர்வாகி

## பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
K.K.S. வீதி, சுன்னாகம்.
(இரு இடங்களிலும்)

### A/L 2021
தொழில்நுட்பப்பிரிவு
ஆரம்பம்: 06.04.2019 சனி - 9.00 am
எமது வழமையான ஆசிரியர் குழுவினர்

**Engineering Technology**
Mr. S.ஜெயக்குமார் Mr. A.நிஷாந்தன்
Mr.N.P நிஜாந்தன்

**Science for Technology**
Mr. A. ரவீந்திரன் Mr.S.செந்தூரன்
Mr.S.அருள்நேசன்

**Bio System Technology**
M.A.நிறோஜன்

Media - Mr.K.கஜிதரன்
Agriculture - Mr.S.சஞ்ஜீவன்
Geography - Mr.P.S.குமரன்

உங்கள் அனுமதிகளை யாழ்நகர், சுன்னாகம் இரு இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
077 376 3511
A/L - 2020 பிரிவு 1, 2 நடைபெறுகின்றன.

## வீடு வாடகைக்கு தேவை
யாழ். நகரை அண்டிய பகுதியில் வீடுவாடகைக்குதேவை, வாகன தரிப்பிடவசதி தேவை.
தொடர்பு -
071 618 2182

## மண்கும்பான்
### அருள்மிகு வீரகத்தி விநாயகர் மஹோற்சவம் - 2019



இன்று (04.04.2019)
வியாழக்கிழமை
நான்காம் திருவிழா
வித்தியா கணபதி
வீணை அலங்காரம்
அன்னவாகன உலா
f:mankumpan vellaipttady sri veerakathy vinayagar
அனுசரணை
லலிதா ஜுவல்லறி
தங்கப்பவுண் வியாபாரம்
இல.L.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Tel: 021 222 2863/ 077 6183 302

## Chartered Accountancy Executitive Level

Classes For September 2019 Examination

6th April 2019 இல் ஆரம்பம்

- பல்வேறு துறைகளில் அனுபவம் மற்றும் கல்வித்தகமைகள் கொண்ட முன்னணி விரிவுரையாளர் குழாம்.
- வடகிழக்கில் - இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் (Institute of Chartered Accountant) Executitive & Business Level க்கான Gold Partner தரம் கொண்ட ஒரே நிறுவனம்.
- தமிழ், ஆங்கிலம், சிங்களம் மொழி மூலமான விரிவுரைகள் சிறந்த மொழியால் தேர்ச்சியுடைய விரிவுரையாளர்களினால் நடத்தப்படும்.
- பட்டயக்கணக்காளர் தகமை பெற தேவையான பயிற்சி வசதிகள் (Articles) IBM நிறுவனத்தில் பதிவு செய்து 6 மாதத்தின் பின்னர் ஏற்பாடு செய்து தரப்படும்.
- இலகுவாக அடையக்கூடிய இடம் (யாழ் பஸ் நிலையம் பின்னால்)
- அதிகூடிய சித்தி வீதங்களை கொண்ட ஒரே நிறுவனம்

தொடர்புகளுக்கு:

INSTITUTE OF BUSINESS MANAGEMENT
No. 01, 2nd Lane, Power House Road, Jaffna.
021 222 7770 | 076 672 1010 | 077 763 3915
E-mail : ibm.jaffna2015@gmail.com |
Web : www.ibmsrilanka.com

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

அன்னை மடியில் 23 . 04 . 1940



ஆண்டவன் அடியில் 06 . 03 . 2019

### அமரர் பேரம்பலம் நடேசபிள்ளை

தந்தைக்கு இலக்கணமாய்
அன்பிற்கு தாயுமானவராய்
உறவுகளுக்கு உறுதுணையாய்
அண்டி வந்தோர்க்கு ஆதரவாய்
எளிமையே வாழ்வென வாழ்ந்து
கடமையே கண்ணென கொண்டு
வாழ்வதனில் சரித்திரம் படைத்து

ஊர் போற்ற வாழ்ந்த உத்தமரே !
நீவீர் மறைந்திடினும், என்றும்
அழியாப் புகழோடு எமக்குள்
வாழ்ந்திடும் எம் அன்புத் தெய்வம் - நீர்
வேரக்கேணி கந்தனவன் பாதாரவிந்தங்களை
பற்றிட பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (05.04.2019) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"நாகபவனம்"
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
021 205 7574
(CS 00583)(14.17)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.